

கலைஞர் 100 1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 170 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 17 – புதன்கிழமை 31 ஜனவரி 2024 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 170 : Thiruvalluvar Year - 2055 - Thai 17 - Wednesday 31 January 2024 - Madurai 8 Pages ₹ 5.00


## முதலீட்டுக்கான சிறந்த சூழல் அமைந்துள்ளதால்

# தமிழ்நாட்டுக்கு தொழில் தொடங்க வாரீர்!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 29.1.2024 அன்று ஸ்பெயின் நாட்டு தலைநகர் மேட்ரிட் நகரில் நடைபெற்ற ஸ்பெயின் தொழில் அமைப்புகள் மற்றும் ஸ்பெயின் பெரும் தொழில் நிறுவனங்களின் முதலீட்டாளர்கள் மாநாட்டில் (Tamil Nadu Investors First Port of Call) கலந்து கொண்டு, தமிழ்நாட்டில் நிலவும் சாதகமான முதலீட்டுச் சூழல் மற்றும் கட்டமைப்பு வசதிகள் குறித்து எடுத்துரைத்து, தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்து உரையாற்றினார். இம்மாநாட்டில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, 'Guidance' நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு, ஸ்பெயின் நாட்டிற்கான இந்தியத் தூதர் தினேஷ் கே. பட்நாயக், ஸ்பெயின் நாட்டு தொழிலதிபர்கள் கலந்து கொண்டனர்.

## ஸ்பெயின் - மேட்ரிட்டில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பு!

**மேட்ரிட் (ஸ்பெயின்) ஜன. 31-**

**"முதலீட்டுக்கான சிறந்த சூழல் அமைந்திருப்பதால் தமிழ்நாட்டில் தொழில் தொடங்க வாரீர்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஸ்பெயின் தலைநகர் மேட்ரிட்டில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் உரையாற்றும் போது அழைப்பு விடுத்தார்.**

ஸ்பெயின் தலைநகர் மேட்ரிட்டில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 29.1.2024 அன்று ஸ்பெயின் நாட்டு தலைநகர் மேட்ரிட் நகரில் நடைபெற்ற ஸ்பெயின் தொழில் அமைப்புகள் மற்றும் ஸ்பெயின் பெரும் தொழில் நிறுவனங்களின் முதலீட்டாளர்கள் மாநாட்டில் (Tamil Nadu Investors First Port of Call) கலந்து கொண்டு, தமிழ்நாட்டில் நிலவும் சாதகமான முதலீட்டுச் சூழல் மற்றும் கட்டமைப்பு வசதிகள் குறித்து எடுத்துரைத்து, தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்து, ஆற்றிய உரை வருமாறு :-

ஸ்பெயினில் நடைபெறும் தமிழ்நாட்டின் முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்றுள்ள தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா அவர்களே,

ஸ்பெயின் நாட்டிற்கான இந்தியத் தூதர் தினேஷ் பட்நாயக் அவர்களே,

ஸ்பெயின் நாட்டின் பொருளாதார வர்த்தக துறையின் தலைமை இயக்குநர் அவர்களே,

ஸ்பெயின் வர்த்தக சபையின் சர்வதேச இயக்குநர் அவர்களே,

ஸ்பெயின் இந்தியா கூட்டமைப்பின் தலைவர் அவர்களே,

Guidance தமிழ்நாடு மேலாண்மை இயக்குநர் அவர்களே,

ஸ்பெயின் நாட்டின் முக்கிய நிறுவனங்கள் மற்றும் தொழில் அமைப்புகளின் நிர்வாகிகளே,

அனைவருக்கும் வணக்கம்!

ஸ்பெயின் நாட்டின் தலைநகரான 'மாத்ரித்' நகருக்கு நான் வருகை தருவது இதுவே முதல் முறை. உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் இருக்கும் தமிழ்நாடு என்ற மிகமுக்கியமான மாநிலத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சராக நான் இருக்கிறேன்.

**ஸ்பெயினுக்கும் தமிழ்நாட்டிற்கும் ஒரு மிகப்பெரும் ஒற்றுமை இருக்கிறது. காளை அடக்குதல் விளையாட்டு, ஸ்பெயினின் தேசிய விளையாட்டாகவும் பாரம்பரிய விளையாட்டாகவும் விளங்குகிறது. எங்கள் தமிழ்நாட்டிலும் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டு எமது கலாச்சாரத்தின் சின்னமாக, உலகப்புகழ் பெற்று விளங்குகிறது.**

எங்களது கட்சி 75 ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்டது. ஆறு முறை அந்த மாநிலத்தில் ஆட்சிக்கு வந்துள்ளது. திருவள்ளுவரை நீங்கள் கேள்விப் பட்டிருப்பீர்கள். அவர் தமிழ் மொழியில்தான் திருக்குறளை எழுதினார். அவரது திருக்குறள் உலகின் 200 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அத்தகைய பெருமையும் பாரம்பரியமும் கொண்ட மாநிலத்தில் இருந்து நான் வந்துள்ளேன்.

**மக்கள் மகிழ்ச்சியாக வாழும் நாடு ஸ்பெயின்!**

கால்பந்து விளையாட்டில் புகழ் பெற்ற நாடு ஸ்பெயின். ஸ்பெயினை நான் இன்னும் சுற்றிப் பார்க்கவில்லை. நான் பார்த்த வரையில் கலைகளின் நாடாகக் காட்சியளிக்கிறது. உங்களது கலை உணர்வு ஒவ்வொரு கட்டிடத்திலும், தெருக்களிலும், ஒவ்வொரு மூலையிலும் உள்ளது.

அழகான நிலப்பரப்பும், துடிப்பான கலாச்சாரமும் இணையப் பெற்று, மக்கள் மகிழ்ச்சியாக வாழும் நாடாக ஸ்பெயின் நாடு விளங்குகிறது.

பழம்பெரும் வரலாறும் பாரம்பரியமும் பெற்ற இந்த நாடு போன்றே, வரலாற்றுப் பெருமை கொண்ட தமிழ்நாட்டின் சார்பாக இங்கு வந்து உங்களைச் சந்திப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

உலகிலேயே அதிகம் பேசப்படும் இரண்டாவது மொழியாகவும் 20 நாடுகளின் அதிகாரப்பூர்வ மொழியாகவும் விளங்கும் ஸ்பானிஷ் மொழி போலவே எங்களது தமிழ்மொழியும் பாரம்பரியம் மிக்கது. கிட்டத்தட்ட 5000 ஆண்டுகளுக்கும் மேல் பழமை வாய்ந்த இலக்கிய மரபைக் கொண்டுள்ள மொழி எங்கள் தமிழ் மொழி.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

## நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது!

# அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம்!

### நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு – மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா பங்கேற்பு!

புதுடெல்லி, ஜன. 31-

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரை சுமூகமாக நடத்துவது தொடர்பாக டெல்லியில் ஒன்றிய அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் அனைத்துக்கட்சி கூட்டம் நடைபெற்றது.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் இன்று குடியரசுத் தலைவர் திரெளபதி முர்மு உரையுடன் தொடங்குகிறது.

அதைத்தொடர்ந்து பிப்ரவரி ஒன்றாம் தேதி, நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், இடைக்கால பட்ஜெட்டை தாக்கல் செய்கிறார்.

பின்னர், குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதம் உள்ளிட்ட அலுவல்கள் 9ம் தேதி வரை நடைபெறுகிறது. இந்நிலையில், கடைசி கூட்டத்தொடரை சுமூகமாக நடத்துவது குறித்து ஆலோசிக்க, அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி அழைப்பு விடுத்திருந்தார்.

அதன்படி, ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் நேற்று அனைத்துக் கட்சி கூட்டம் நடைபெற்றது.

இதில் காங்கிரஸ், தி.மு.க., கம்யூனிஸ்ட் கட்சிகள் உள்ளிட்ட அனைத்துக்கட்சி பிரதிநிதிகள் பங்கேற்றனர். தி.மு.க. சார்பில் நாடாளுமன்ற குழு தலைவர் டி.ஆர்.பாலு, தி.மு.க. மாநிலங்களவை குழு தலைவர் திருச்சி சிவா பங்கேற்றனர்.

## அண்ணல் காந்தி அடிகள் நினைவு தினம்! முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி

# தமிழ்நாடு முழுவதும் மத நல்லிணக்க உறுதிமொழி!

### சென்னையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் – கழக முன்னணியினர் பங்கேற்பு!

**சென்னை, ஜன. 31 -**

**மதவெறியர்களால் காந்தியடிகள் கொல்லப்பட்ட ஜனவரி 30ஆம் நாளான நேற்று மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தமிழ்நாடு முழுவதும் மத நல்லிணக்க நாளாகக் கடைப்பிடித்து உறுதிமொழி ஏற்கப்பட்டது. சென்னை அண்ணா அறிவாலயத்தில் கழக இளைஞர் அணி செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர்கள் பங்கேற்று மத நல்லிணக்க உறுதிமொழி ஏற்றனர்.**

மதநல்லிணக்கத்தின் அடையாளமான அண்ணல் காந்தியடிகள் மதவெறியர்களால் கொல்லப்பட்ட ஜனவரி 30ஆம் நாளான நேற்று, தமிழ்நாடு முழுவதும் மதநல்லிணக்க நாளாகக் கடைப்பிடித்து உறுதிமொழி ஏற்கப்பட்டது. சென்னை அண்ணா அறிவாலயத்தில் மத நல்லி ணக்க உறுதிமொழி ஏற்கப்பட்டது. இதில் அமைச்சர்கள் கே.என்.நேரு, உதயநிதி ஸ்டாலின், எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, கீதா ஜீவன், அனிதா ராதா கிருஷ்ணன், அனைத்து மத பிரதிநிதிகள் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டு, மதநல்லிணக்க உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர். அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மத நல்லிணக்க உறுதிமொழியை வாசித்தார்.

இந்நிகழ்வில் தி.மு.க. தலைமை நிலைய செயலாளர்கள் பூச்சி முருகன், துறைமுகம் காஜா, அமைப்பு இணை செயலாளர் அன்பகன் கலை, அமைப்பு துணை செயலாளர்கள் ஆஸ்டின், தாயகம் கவி உள்ளிட்டோர் கலந்துகொண்டு மத நல்லிணக்க உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்.

இதேபோன்று தமிழ்நாடு முழுவதும் கழகத்தினர் - அரசு அலுவலகங்களில் அலுவலர்கள் - ஊழியர்கள் உறுதிமொழி ஏற்றனர்.



அண்ணல் காந்தி அவர்களின் நினைவு நாளான நேற்று, கழகத்தலைவர், முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மத நல்லிணக்க உறுதிமொழி ஏற்கும் நிகழ்வு அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது. இதில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர்கள், கழக முன்னணியினர் பங்கேற்று மத நல்லிணக்க உறுதிமொழி ஏற்றனர்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 31-01-2024

# யு.ஜி.சி. உத்தரவில் அநீதி

உயர்கல்வி நிறுவனங்களில் பட்டியல் சாதி (SC), பழங்குடியினர் (ST), இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (OBC) இடங்களுக்குப் பொருத்தமான விண்ணப்பதாரர்கள் கிடைக்கவில்லை என்றால் பொதுப் பிரிவினருக்கு அவற்றைக் கொடுக்கலாம் என்று SC, ST மற்றும் OBC விண்ணப்ப தாரர்களுக்கான இடஒதுக்கீட்டை நீக்குவதற்கான வரைவு வழிகாட்டுதல் களை யு.ஜி.சி. வெளியிட்டுள்ளது.

**பொதுமக்களின் கருத்தை தெரிவிப்பதற்கான கடைசி தேதி ஜனவரி 28-ம் தேதியுடன் முடிவடைகிறதாம். இராமர் கோவில் விவகாரத்தில் மற்றவர் களை திசை திருப்பி மறைத்து விட்டு திரைமறைவில் பா.ஜ.க. செய்யும் அநீதி தான் இது.**

பல்கலைக்கழக மானியக் குழு வெளியிட்டுள்ள வரைவு வழிகாட்டுதலில், “குரூப் ஏ பதவி, காலியாக இருக்க அனுமதிக்கப்படாவிட்டால், சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகம் பொது நலன் கருதி இந்த முன்மொழிவை தயாரிக்கலாம்” என கூறப்பட்டுள்ளது.

குரூப் சி மற்றும் குரூப் டி பதவிகளுக்கான இடஒதுக்கீட்டை நீக்குவதற்கான முன்மொழிவுக்கு பல்கலைக்கழக நிர்வாகக் குழு ஒப்புதல் அளித்தாலும், குரூப் ஏ மற்றும் பி பதவிகளுக்கு, இட ஒதுக்கீட்டிற்கான முன்மொழிவை கல்வி அமைச்சகத்திடம் சமர்ப்பிக்க வேண்டும் என இதில் தெரிவிக்கப்பட் டுள்ளது. இடஒதுக்கீடு பதவிகள் காலியாக இருந்தால், பல்கலைக்கழகங்கள் விரைவில் இரண்டாவது முறையாக ஆட்சேர்ப்புக்கு அழைப்பதன் மூலம் காலியிடங்களை நிரப்ப முயற்சிக்க வேண்டும் என்றும் வழிகாட்டுதலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**உயர்கல்வி நிறுவனங்களில் SC, ST மற்றும் OBC பிரிவினருக்கான இடஒதுக்கீட்டை நீக்கி, இட ஒதுக்கீட்டின் கீழ் போதுமான விண்ணப்பதாரர்கள் இல்லாத பட்சத்தில், அந்த இடங்களை பொதுப்பிரிவின் கீழ் நிரப்புவதற்கான, வரைவு வழிகாட்டுதல்களை பல்கலைக்கழக மானியக் குழு பரிந்துரைப்பது இதுவே முதல்முறை.**

ஒன்றிய அரசின் வேலைவாய்ப்புகளில் பட்டியல் இனத்தவர்க்கும் பழங் குடி இனத்தவர்க்கும் இடஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்பட்டு 75 ஆண்டுகள் ஆகிறது. இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீடு நடை முறைப்படுத்தப்பட்டு 33 ஆண்டுகள் ஆகிவிட்டது. ஆனால் இவை முழுமை யான பலனைக் கொடுத்துவிட்டதா என்றால் இல்லை.

**இட ஒதுக்கீடு அமலாகி பல்லாண்டுகள் ஆகியும், IIT, IIM நிறுவன உயர் பதவிகளில் ஒதுக்கீடு முழுமையாக அமல்படுத்தப்படாத அநீதி தொடர்கிறது. இங்கெல்லாம் தரை மட்டத்தில்தான் இடஒதுக்கீடு தரப்படுகிறது. இந்தக் காலி யிடங்களை நிரப்ப சிறப்பு முயற்சி** (special drive to fill the backlog vacancies) **எடுப்பதற்கு பதிலாக, இடஒதுக்கீட்டையே ஒழித்துக்கட்டும் சூழ்ச்சியையே யு.ஜி.சி. செய்கிறது.**

உயர்கல்வி நிறுவனப் பணிகளுக்கு இடஒதுக்கீட்டுப் பிரிவினரில் தகுதி யானவர்கள் கிடைக்காவிட்டால், அந்தப் பணிகளை பின்னடைவுப் பணி யிடங்களாக அறிவித்து சிறப்பு ஆள்தேர்வின் மூலம் நிரப்புவதுதான் சமூக நீதியின் அடிப்படை ஆகும். ஆனால் தகுதியானவர்கள் இல்லை என்று அறிவித்து இட ஒதுக்கீட்டை ரத்து செய்வது இடஒதுக்கீட்டையே ரத்து செய் வதற்கான தந்திரம் ஆகும். அதனைத்தான் அப்பட்டமாகச் செய்ய நினைக் கிறார்கள்.

பொதுவாகவே சமூக நீதியைக் குழி தோண்டிப் புதைப்பதைத்தான் பா.ஜ.க. ஆட்சி தொடர்ந்து செய்து வருகிறது. 2021 ஆம் ஆண்டு ஜுலை 12ஆம் தேதி நீட் தேர்வு தொடர்பான அறிவிப்பை இந்திய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் அறிவித்தபோது, இதர பிற்படுத்தப் பட்டோருக் கான இடஒதுக்கீடு இல்லாமலேயே தேர்வு நடைபெறும் என்று கூறியிருந்தார். உச்சநீதிமன்றத்திலும், உயர்நீதிமன்றத்திலும் வாதாடும் போது 27 சதவிகித இடஒதுக்கீடு தரமாட்டோம் என்று முதலில் சொன்னது பா.ஜ.க. அரசு. நாடு முழுவதும் எதிர்ப்பு வந்த நிலையில் ஒப்புக் கொண்டார்கள். அதிலும் உயர்வ குப்பு ஏழைகளுக்கு 10 விழுக்காடு என்பதில்தான் குறியாக இருந்தார்கள்.

பொருளாதார அளவுகோலை சமூகநீதியில் புகுத்தி, முன்னேறிய பிரிவு ஏழைகளுக்கு ஒரு இடஒதுக்கீட்டை பா.ஜ.க. அரசு கொண்டு வந்தது. பொரு ளாதாரத்தில் பின் தங்கியவர்க்கு, நிதி உதவிகள் செய்வதில் மாற்றுக் கருத்து இல்லை. அரசியல் சட்டமானது சமூக நீதிக்கான அளவுகோலாக சமூகத்தி லும், கல்வியிலும் பின் தங்கியவர்க்குதான் சிறப்பு சலுகைகள் வழங்குகிறது. பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களுக்கு அல்ல. இந்திய நாடாளுமன்றத் திலேயே ‘பொருளாதார அளவுகோல்’ என்ற கருத்து தோற்றது ஆகும். ஆனால் அந்தப் பொருளாதார அளவுகோலை கையில் எடுத்தது பா.ஜ.க.

**இடஒதுக்கீடு என்றாலே தகுதி போய் விட்டது, திறமை போய்விட்டது, ‘குறைஞ்ச மார்க் வாங்கினவா உள்ளே வந்துவிட்டா’ என்று குமைந்து கொண்டு இருந்தவர்கள், பொருளாதார இடஒதுக்கீடு தரப்பட்டதும் ‘சைலண்ட் மோட்’க்கு போய்விட்டார்கள். இப்போது யாரும் தகுதி போய்விட்டது, திறமை போய் விட்டது என்று பேசுவது இல்லை.**

சமூகநீதியில் நாம் அடைய வேண்டிய தூரம் மிகமிக அதிகம் ஆகும். சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களது சிலைத் திறப்பு விழாவில் பேசிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சமூகநீதி வரலாற்றில் நாம் அடைய வேண்டிய இலக்குகளை விரிவாகப் பட்டியலிட்டார். இதற் கிடையே ஏற்கனவே இருக்கும் இடஒதுக்கீட்டில் கை வைக்கிறது யு.ஜி.சி.

இந்த உத்தரவுக்கு கடுமையான எதிர்ப்பு எழுந்துள்ள நிலையில் அதனை திரும்பப் பெற்றுள்ளதாக தகவல்கள் வந்துள்ளன. இனி எந்தச் சூழலிலும் இதுபோன்ற விதிமுறைகள் வரக்கூடாது.

**இடஒதுக்கீட்டுப் பிரிவினரில் தகுதியானவர்கள் கிடைக்காவிட்டால், அந்தப் பணிகளை பின்னடைவுப் பணியிடங்களாக அறிவித்து சிறப்பு ஆள்தேர்வின் மூலம் நிரப்புவதை கட்டாயமாக்க வேண்டும். தகுதியானவர்களை உருவாக் காமல், தகுதி இல்லை என்று காரணம் சொல்வது மிகமிக அநீதியாகும்.**

●●

## நாகை மாவட்டத்தில் வீடு கட்டும் திட்டச் செயல்பாடு தொடர்பாக

# ஆளுநர் ரவியின் ஊடகப் பதிவிற்கு புள்ளி விவரங்களுடன் பதில்!

## ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி அறிவிப்பு!



**சென்னை, ஜன. 31-**

**பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவது தொடர்பாக சில சொந்த கருத்துகளை தமிழ்நாடு ஆளுநர் ரவி தெரிவித்து இருந்தார். இது தொடர்பாக ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி புள்ளி விவரங்களோடு அளித்துள்ள பதில றிக்கை பின்வருமாறு:**

நாகப்பட்டினம் மாவட்டம் வெண்மணி ஊராட்சியில் பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட் டத்தின் கீழ் 127 பயனாளிகளுக்கு வீடுகள் கட்ட அனுமதி வழங்கப் பட்டு இதுவரை 75 பயனாளிகள் வீடுகளை கட்டி முடித்துள்ளனர். மீதமுள்ள 52 பயனாளிகளால் வீடுகள் கட்டும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

நாகப்பட்டினம் மாவட்டத் திற்கு ஒன்றிய அரசால் 31,051 வீடுகள் மட்டும் வழங்கப்பட்டு 23,110 வீடுகள் பயனாளிகளால் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மீத முள்ள வீடுகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

**ஊரக குடியிருப்பு திட்டத்தில் மாநில அரசின் கூடுதல் பங்களிப்பு!**

பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின் கீழ், ஒரு வீடு கட்டுவதற்கு ஒன்றிய அரசு நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகை ரூ.1.20 இலட்சம் ஆகும். இத்திட்டத்தில் ஒன்றிய அரசு தன் பங்காக வீடு கட்ட 72 ஆயிரம் ரூபாய் மட்டுமே வழங்குகிறது. ஆனால், ஊரகப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் நலன் கருதி தமிழ்நாடு அரசு மாநிலத்தின் நிதி பங்களிப்பாக 1 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாய் வழங்குகிறது.

இதனுடன் மகாத்மா காந்தி வேலை உறுதித் திட்டம் மூலம் ரூ.26,460 தூய்மை பாரத இயக் கம் மூலம் ரூ.12,000 உடன் சேர்ந்து தமிழ்நாட்டில் ஒரு வீட் டின் அலகுத் தொகை ரூ.2,78,460 ஆக உள்ளது. இந்தியாவிலேயே அதிக அளவாக தமிழ்நாட்டில் தான் பயனாளிகளுக்கு பிரதம மந் திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின் கீழ் வீடு கட்ட அதிக தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வரசு பதவியேற்றவுடன் 2,41,861 பயனாளிகளுக்கு வீடு கள் கட்ட அனுமதி வழங்கப்பட் டது. ஏற்கனவே அனுமதி வழங்கி முடிவுறாமலிருந்த வீடுகளையும் சேர்த்து 07.05.2021க்கு பின்னர் இதுவரை 2,93,277 வீடுகள் முடிக் கப்பட்டுள்ளன. இவ்வரசு பதவி யேற்ற நாளான 07.05.2021க்கு பிறகு அலகு தொகையாக ஒன் றிய அரசு நிதியிலிருந்து ரூ.2933.31 கோடி வரப்பெற்றுள்ளது. மாநில அரசு இத்திட்டத்திற்கு ரூ.3116.54 கோடி நிதி வழங்கியுள்ளது. இத் திட்டத்தின் கீழ், பயனாளிகள் விதிமுறைகளுக்கு உட்பட்டு முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டு, வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

**வெண்மணி ஊராட்சிக்கு ஒப்புதல் தராத ஒன்றிய அரசு!**

பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசால் ஊராட்சி வாரி யாக வீடுகள் வழங்க இலக்கு நிர் ணயம் செய்யப்படுகிறது. ஒன்றிய அரசால் இலக்கு நிர்ணயம் செய் யப்பட்டு தகுதி வாய்ந்த பயனா ளிகள் இல்லாத ஊராட்சிகளிலி ருந்து, தகுதி வாய்ந்த பயனாளிகள் அதிகமுள்ள ஊராட்சிகளுக்கு வீடுகளை மாற்றி வழங்க, ஒன்றிய அரசு ஒப்புதல் அளிக்காத கார ணத்தால், வெண்மணி போன்ற ஊராட்சிகளுக்கு இத்திட்டத்தின் கீழ் தேவைக்கேற்ப வீடுகள் வழங்க இயலவில்லை.

தற்போது தமிழ்நாடு அரசால் குடிசை வீடுகளுக்காக நடத்தப் பட்ட கணக்கெடுப்பில் நாகப் பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட் பட்ட வெண்மணி ஊராட்சியில் மொத்தம் 66 குடிசை வீடுகள் தகுதி வாய்ந்தவையாக கண்டறி யப்பட்டுள்ளது. மேற்காணும் குடிசை வீடுகள் தமிழ்நாடு அர சின் ஊரக குடியிருப்பு திட்டம் மூலம் கான்கிரிட் வீடுகளாக இனி வரும் காலங்களில் மாற்றப்படும்.

**1970களிலேயே குடிசைகளை மாற்றிய கலைஞர் அரசு!**

மேலும் வீட்டுமனை இல்லாத ஏழை எளிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கி அவர்களுக்கு வீடுகள் கட்டி வழங் கியதும், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தை (தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்) 1970களிலேயே உருவாக்கி நகர்ப் புரங்களில் குடிசையில் வசித்த வீடற்ற மக்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டி வழங்கி யதும், ஊரகப்பகுதிகளில் கலை ஞர் வீடு வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி எண்ணற்ற ஏழை மக்கள் பயனடைய வழிவ குத்ததும் முத்தமிழறிஞர் கலைஞ ரின் அரசு தான் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, எல்லோருக்கும் எல் லாம் என்ற கொள்கையுடன் தொடர்ந்து செயல்படும் இந்த திராவிட மாடல் அரசு, ஊரகப் பகுதி மக்களுக்கு தேவையான வீடு கட்டும் திட்டத்தினை தொடர்ந்து திறன்பட செயல்ப டுத்தும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் இ.பெரிய சாமி குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ்நாட்டுக்கு அதிக கெடுதல், கேடு நினைப்பவராகத் திகழும்

# ஆளுநர் ரவிக்கு ‘மீடியா மேனியா’ நோய் தாக்கியுள்ளதாகத் தெரிகிறது!

## அமைச்சர் எஸ்.ரகுபதி காட்டமான பதில்!



**சென்னை, ஜன. 31-**

**“கேரளம், தெலங்கானா, தமிழ்நாடு ஆளுநர்களுக்கு இடையே யாருடைய பெயர் ஊடகங்களில் அதிகம் வருகிறது என மறைமுகப் போட்டி நடக் கிறது” என சட்டத்துறை அமைச் சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரு மான எஸ்.ரகுபதி ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு பதில் அறிக்கை விடுத்துள்ளார்.**

அமைச்சர் எஸ்.ரகுபதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்களுக்கு ‘மீடியா மேனியா’ நோய் தாக்கி யுள்ளதைப் போலத் தெரி கிறது. தினந்தோறும் தன் னைப் பற்றி ஏதாவது ஒரு செய்தி வரவேண்டும் எனச் செயல்பட்டு வருகி றார். அதிலும் குறிப்பாகத் தென் மாநிலங்களில் உள்ள கேரள ஆளுநர் ஆரீப் முகமது கான், தெலங்கானா ஆளுநர் தமி ழிசை, தமிழ்நாட்டு ஆளு நர் ஆர்.என்.ரவி ஆகிய மூவருக்கும் தங்களுக்குள் யாருடைய பெயர் அதிக மாக மீடியாக்களில் வருகி றது என்ற மறைமுகப் போட்டியே இருப்பது போலத் தெரிகிறது. மாநில அரசின் மீது விமர்சனம் செய்து அதன் மூலம் ஊடக வெளிச்சம் பெறவே இத்த கைய செயல்களில் ஈடு பட்டு வருகின்றனர். மூவ ரும் தாங்கள் ஆளுநர் என்பதையே மறந்து, பா.ஜ.கட்சியால் அனுப் பப்பட்ட அந்தந்த மாநில செய்தித் தொடர்பாளர்க ளைப் போல நடந்து கொள்கிறார்கள்.

நேற்றைய தினம் நாகப் பட்டினம் சென்ற ஆளு நர், அதன் பிறகு ஒரு செய் தியை வெளியிட்டுள்ளார். நாகை மாவட்டத்தில் பிரதமரின் வீடு கட்டும் திட்டத்தைப் பற்றி விமர் சித்துள்ளார். வீடுகள் சரி யில்லை என்றும் இதற்குக் காரணம் தமிழ்நாடு அர சின்நிர்வாக அக்கறை யின்மை என்றும், ஊழல் என்றும் வாய்க்கு வந்த வார்த்தைகளைப் பயன் படுத்தி இருக்கிறார்.

அரசு திட்டத்தில் ஏதா வது விளக்கம் தேவைப் பட்டால் அது குறித்துக் கேட்டறியலாம். அதை விட்டு விட்டு எதிர்க்கட்சி யைப் போல மீடியாக் களில் விமர்சனம் செய்யக் கிளம்புவதுதான் ஒரு ஆளு நருக்கு அழகா? எந்த ஆதா ரத்தின் அடிப்படையில் ஊழல் என்று கூறுகின் றார்? வாய்க்கு வந்ததைப் பேசிடவும் எழுதிடவும் அவர் அட்ரஸ் இல்லாத ஆள் அல்லவே?

கீழ்வெண்மணி தியாகி கள் மணிமண்டபத்தை யும் கொச்சைப்படுத்தி இருக்கிறார் ஆளுநர். குடி சைகளுக்கு மத்தியில் கான் கிரீட் கட்டுமானம் கட்டி இருக்கிறார்களாம். இது தியாகிகள் மற்றும் ஏழை களுக்கு இழைக்கப்பட்ட கேலிக்குரிய அவமான மாம். ஐம்பது ஆண்டுக ளுக்கு முன்னால் நிலப்பிர புத்துவ ஜாதியவாத சக்திகளால் தீ வைத்துக் கொளுத்தப்பட்ட தியாகி களை நினைவுகூரும் வகையில் மார்க்சிஸ்ட் கம் யூனிஸ்ட் கட்சியால் எழுப் பட்ட நினைவுச் சின்னம் அது. அத்தகைய கொடூர சம்பவத்தில் கொல்லப் பட்ட தியாகிகளைப் போற்றும் வகையில்தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அந்தச் சின்னத்தை அமைத்துள்ளது. இதில் என்ன குறை கண்டார் ஆளுநர்? சுற்றிலும் இருக் கிற குடிசைகளை அகற்றச் சொல்கிறாரா?

அயோத்தியில் இப் போது ஆயிரம் கோடியில் கோயில் கட்டி இருக்கி றார்கள். அயோத்தி நகர் இப்போது எப்படி இருக்கி றது என்பதை ஆளுநர் ஆர்.என்.ரவி ஒரு முறை அங்கு போய் பார்த்து விட்டு திரும்பட்டுமே. உலகத் தலைவர்கள் வரும் போது குஜராத் மாநிலத்து ஏழைகளின் வாழ்விடங் களை பச்சை ‘ஸ்கிரீன்’ போட்டு மறைத்ததை இந்த நாட்டு மக்கள் இன்னும் மறக்கவில்லை. எந்தப் பணிக்காக வந் தாரோ, அதைவிட்டு விட்டு அனைத்தையும் பார்த்துக் கொண்டு இருக் கிறார் ஆர்.என்.ரவி.

‘தமிழ்நாடு என்று சொல்லக் கூடாது, தமிழ கம் என்றுதான் சொல்ல வேண்டும்’ என்றார் ஆளு நர். வரலாற்றில் காலம் காலமாக இருக்கும் பெயரை மாற்றும் அதிகா ரத்தை இவருக்கு யார் கொடுத்தது என்று சொன் னதும், அதனைத் திரும் பப் பெற்றுக் கொண்டார் ஆளுநர். சில நாட்களுக்கு முன்னால், ‘மகாத்மா காந் தியால் இந்தியாவுக்கு சுதந் திரம் கிடைக்கவில்லை’ என்றார். அதற்கு எதிர்ப்பு கிளம்பியதும், ‘ நான் அப் படிச் சொல்லவில்லை’ என்று சொல்லி விட்டார்.

தமிழ்நாட்டுக்கு ஆளுந ராக வந்த ஆர்.என்.ரவி, தமிழ்நாட்டின் நன்மைக் காக இதுவரை ஏதாவது செய்துள்ளாரா என்றால் இல்லை. தனது அதிகாரத் தைப் பயன்படுத்தி ஒன் றிய பா.ஜ.க அரசிடம் இருந்து ஏதாவது திட்டங் களைக் கொண்டு வந்திருக் கிறாரா என்றால் இல்லை. குடும்ப வேலையாக அடிக் கடி டெல்லி செல்லும் அவர், தமிழ்நாட்டு மக்களின் கோரிக்கைக்காக எப்போ தாவது டெல்லி சென்றுள் ளாரா என்றால் இல்லை. அவர்தான், சொந்தமாக எந்த நன்மையும் செய்ய வில்லை. நாட்டு மக்க ளுக்கு நன்மைகள் செய் யும் தமிழ்நாடு அரசுக்கும், முதலமைச்சர் அவர்களுக் கும் உதவியாக இருக்கி றாரா என்றால் அதுவும் இல்லை. இடைஞ்சலாக வும், மாநிலத்துக்கு அதிக கெடுதல் செய்பவராகவும், கெடுதல் நினைப்பவராக வும் இருக்கிறார் ஆளுநர்.

**முறைகேட்டில் சிக்கியவரை காப்பாற்றத் துடிக்கும் ஆளுநர்!**

ஆன்லைன் ரம்மி தடைச் சட்ட மசோதா வுக்கு அனுமதி வழங்கா மல் இழுத்தடித்தது முதல், ஊழல் மற்றும் நிதிமுறை கேடுகளில் சிக்கிக் கைதான சேலம் பல்க லைக்கழக துணைவேந் தரைக் காப்பாற்றும் நடவ டிக்கைகள் வரை ஆளுந ரின் அனைத்து நடவடிக் கைகளும் சர்ச்சைக்குரிய தாக மட்டுமல்ல, சந்தே கத்துக்குரியதாகவும் அமைந்துள்ளன. தமிழ் நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்பட்ட சட்ட முன் வடிவுகளையும், உத்தரவு களையும், கோப்புகளை யும் பல மாத காலமாக ஊறுகாய்ப் பானையில் ஊற வைப்பதைப்போல கிண்டி மாளிகையில் ஊற வைத்துக்கொண்டு இருக் கிறார். பொறுத்துப் பொறுத்துப் பார்த்து, தமிழ்நாடு அரசின் சார் பில் உச்சநீதிமன்றத்தில் வழக்குப் போட்டோம்.

**மன்னர் போல தன்னை நினைத்துக் கொள்கிறார்!**

“ஆளுநர் என்பவர் குடி யரசுத் தலைவரால் நியமிக் கப்படுபவர். அவர் பெயர ளவில்தான் மாநிலத்தின் தலைவராக இருக்கிறார். ஆளுநர் என்பவருக்கு அரசியல் சட்டப்படி சில அதிகாரங்கள் தரப்பட்டுள் ளன. அந்த அதிகாரங்களை வைத்து மக்களால் தேர்ந் தெடுக்கப் பட்ட சட்டப் பேரவைகள் சட்டமியற் றும் வழக்கமான பணி களை முறியடித்துவிட முடியாது” என்று உச்சநீதி மன்ற நீதிபதிகள் உறுதியா கத் தெரிவித்தார்கள். அதன் பிறகும் ஏதோ அதிகாரம் பொருந்தியவராக, தன்னை மன்னரைப் போல நினைத் துக் கொண்டு ஆளுநர் ரவி செயல்பட்டு வருகிறார்.

ஆளுநராக இருந்து அர சியல் செய்வதை விடுத்து, நேரடியாக அவர் அரசி யல் களத்துக்கு வரலாம். அவரது அந்த ஆசைக்கு அகில இந்திய பா.ஜ.க தலைமை அனுமதி அளித் தால், ‘அவருக்கும் நல்லது தமிழ்நாட்டு மக்களுக்கும் நல்லது’ என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி விடுத்துள்ள அறிக்கையில் குறிப் பிட்டுள்ளார்.




நாடாளுமன்றத் தேர்தல் குறித்து அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தூத்துக்குடி மாவட்டக் கழக நிர்வாகிகளுடனான கலந்துரையாடல் கூட்டத்தில் தேர்தல் ஒருங்கிணைப்பு குழுவைச் சேர்ந்தவரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார். இதில் நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுவினர் கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினரான – அமைச்சர் எ.வ.வேலு, அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர்கள், அமைச்சர்கள் பி.கீதாஜீவன், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.




நாடாளுமன்றத் தேர்தல் குறித்து அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற கன்னியாகுமரி மாவட்டக் கழக நிர்வாகிகளுடனான கலந்துரையாடல் கூட்டத்தில் தேர்தல் ஒருங்கிணைப்பு குழுவைச் சேர்ந்தவரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார். இதில் நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுவினர் கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினரான – அமைச்சர் எ.வ.வேலு, அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர்கள் அமைச்சர் மனோதங்கராஜ், மேயர் ரெ.மகேஷ் உள்ளிட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.




சிவகங்கையில் முதல்வர் தளபதி உத்தரவின் பேரில் மதநல்லிணக்க உறுதிமொழி ஏற்பு கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மாவட்ட துணைச் செயலாளர்கள் த.சேங்கைமாறன், கே.எஸ்.எம்.மணிமுத்து, அனைத்து மத தலைவர்கள் கலந்து கொண்டார்கள்.

### ‘யுனைடெட் ஸ்டூடென்ட்ஸ் ஆஃப் இந்தியா’ கூட்டமைப்பு சார்பில்

# சென்னையில் பிப்.1-ல் மாபெரும் மாணவர் பேரணி! அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சியுரை!

## மாணவரணி நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

கோவை,ஜன.31 –

**தி.மு.க. மாணவர் அணியின் மாவட்ட, மாநில அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கூட்டம் நேற்று முன்தினம் (29.01.2024 –திங்கட்கிழமை), காலை 10.00 மணியளவில், கோவை, பீளமேடு, காளப்பட்டி சாலை “சுகுணா கலையரங்கில்”, கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி. எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ., தலைமையில், அணியின் தலைவர் இரா.ராஜீவ்காந்தி, இணைச் செயலாளர்கள் பூவை சி.ஜெரால்டு, எஸ்.மோகன், துணைச் செயலாளர்கள் மன்னை த. சோழராஜன், சேலம் ரா. தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், கா. அமுதரசன், பி.எம்.ஆனந்த், கா.பொன்ராஜ், வி.ஜி. கோகுல், திருமதி பூர்ணசங்கீதா சின்னமுத்து, திருமதி ஜெ. வீரமணி ஆகியோர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.**

கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ. ராசா, எம்.பி., கலந்து கொண்டு சிறப்புரையாற்றி, கழக மாணவர் அணிக்கு வழிகாட்டுதல்களை வழங்கினார்.

இக்கூட்டத்தில், கோவை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தொ.அ. ரவி, கோவை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசன் மற்றும் கோவை மாநகர் மாவட்டக் கழக செயலாளர் நா. கார்த்திக் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் அனைத்து மாவட்ட, மாநில மாணவர் அணி அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

**மூலை முடுக்கெங்கும் கொண்டு செல்வோம்!**

வளமான மாநிலங்களே, வலிமைமிக்க ஒன்றியத்தை உருவாக்கும் என்ற உன்னத நோக்கத்தோடு, இந்திய துணைக்கண்டத்தில் இருக்கும் அத்தனை மாநிலங்களின் மாநில உரிமையை மீட்டெடுக்கும் வகையில், பெரியார் – அண்ணா – கலைஞர் ஆகியோர் வழியில், கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையேற்று, கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர், இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்மொழிந்து நிறைவேற்றிய “மாநில உரிமை மீட்பு” தீர்மானங்களை, தமிழ்நாட்டின் பட்டி தொட்டியெங்கும், மூலை முடுக்கெங்கும், மாணவ, இளைஞர் சமுதாயத்திடம் கழக மாணவர் அணியினர் கொண்டு செல்வதை முதல் கடமையாக கருதி மாணவர் அணியின் இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

மாநில உரிமைகளை மீட்போம்! வளமான தமிழ்நாட்டை உருவாக்குவோம்! வலிமைமிக்க இந்தியாவை காப்போம்! என்ற பணியினை கழக மாணவர் அணியினர் வருங்கால தலைமுறையினராய் விளங்குகின்ற மாணவர்களிடம் கொண்டு சேர்ப்போம்! வருகின்ற 2024 நாடாளுமன்ற தேர்தலை வென்று காட்டுவோம்! இந்திய ஒன்றியத்தை பாசிசத்திடமிருந்து மீட்டெடுப்போம்! என்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

**நெஞ்சார்ந்த நன்றி!**

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டில், இந்திய அரசியலில் திருப்புமுனை மாநாடாகவும், தமிழ்நாட்டு வரலாற்றில் தடம் பதிக்கக் கூடிய மாநாடாகவும், “மாநில உரிமை மீட்பு” முழக்கத்தை முன்மொழிந்து நடைபெற்ற கழக இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டினை திறந்து வைத்து, தொடக்க உரை வழங்கும் பெருமைமிகு வாய்ப்பை கழக மாணவர் அணியின் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ.,வுக்கு வழங்கிட்ட கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர், உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் இக்கூட்டம் தனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

**கருத்தியல் பயிலரங்கம்!**

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் சிந்தனை, சொல், செயல் வடிவமாய் விளங்கும் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு, திராவிட இயக்க சிந்தனை, கொள்கை, இலட்சியம், கோட்பாடுகள் ஆகிய கருத்தியலில் வலிமைமிக்கவர்களாகவும், இளைய தலைமுறையான மாணவ சமுதாயத்தினரிடம் திராவிட இயக்க சிந்தனை, கொள்கை ஆகியவற்றினை விதைக்கக் கூடியவர்களாக விளங்கிட வேண்டுமென்பதற்காகவும், அரசியலில் களமாடக்கூடிய முன்களபோர் வீரர்களாய் மாணவர் அணியினர் விளங்கிட வேண்டுமென்று, தி.மு.க. மாணவர் அணியின் மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்களுக்கு மூன்று நாள் கருத்தியல் பயிலரங்கம் நடத்த அனுமதி வழங்கிட்ட கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி!

நடைபெற்ற இரண்டு கருத்தியல் பயிலரங்கத்தில் பங்கேற்ற மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்களுக்கு பாராட்டுகளும், வாழ்த்துகளும்!

**டெல்லியில் நடைபெற்ற மாபெரும் மாணவர் பேரணி!**

கடந்த 03.01.2024 அன்று காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்ற மாணவர் அணியின் மாவட்ட அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் ஆணையேற்று, கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு, “யுனைடெட் ஸ்டூடென்ஸ் ஆஃப் இந்தியா” (United Students of India) என்ற மாணவர் கூட்டமைப்பு சார்பில், தேசிய கல்விக் கொள்கை 2020 மற்றும் அதை கொண்டு வந்த பாசிச பா.ஜ.க. அரசை நிராகரிப்போம்! இந்தியாவை காப்போம்! கல்வி உரிமையை காப்போம்!! என்ற முழக்கத்தோடு, கடந்த 12.01.2023 அன்று தலைநகர் டெல்லியில் நாடாளுமன்றம் நோக்கிய மாபெரும் மாணவர் பேரணி (Parliament March) எழுச்சியுடன் நடைபெற்றது. அப்பேரணியில் பல்வேறு மாணவர் அமைப்புகள் பங்கேற்றிருந்தாலும், நமது கழக மாணவர் அணியினரின் பங்களிப்பு பெருமளவு எழுச்சியை தந்தது. அப்பேரணி பெரும் வெற்றியடைய பங்காற்றிய கழக மாணவர் அணியின் மாவட்ட, மாநில அமைப்பாளர் துணை அமைப்பாளர்களுக்கு, தலைமைக் கழக மாணவர் அணி நன்றிகளையும், நெஞ்சார்ந்த பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் இக்கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது.

**அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சியுரை!**

இந்தியாவின் வடக்கே நடைபெற்ற பேரணியைத் தொடர்ந்து, தெற்கே சென்னையில் “மாபெரும் மாணவர் பேரணி”ஐ யுனைடெட் ஸ்டூடென்ஸ் ஆஃப் இந்தியா (United Students of India) கூட்டமைப்பு நடத்த முடிவெடுத்ததன் அடிப்படையில் வரும், 01.02.2024 அன்று சென்னையில் மாபெரும் மாணவர் பேரணி நடைபெற உள்ளது.

இப்பேரணியில் இந்திய அளவிலான பல்வேறு மாணவர் அமைப்புகளின் தலைவர்கள், நிர்வாகிகள் கலந்து கொள்ளவுள்ள நிலையில், பேரணியை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைக்கிறார். பேரணியின் நிறைவில், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எழுச்சியுரை ஆற்ற உள்ளார்.

இந்தியாவை காக்கவும், மாணவர்களின் கல்வி உரிமையை காக்கவும் நடைபெறும் இம்மாபெரும் பேரணியில், தி.மு.க. மாணவர் அணியின் மாவட்ட, மாநில நிர்வாகிகள், மாணவர் அணியினர், தமிழ்நாடு, புதுவையிலுள்ள பல்வேறு கல்லூரிகளின் தி.மு.க. மாணவர் அமைப்பைச் சார்ந்த 15,000க்கும் மேற்பட்டவர்கள் கலந்துக் கொள்வதென இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படுகிறது.

**பேச்சு – கட்டுரைப் போட்டிகள்!**

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்கள் கழக மாணவர் அணிக்கு பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டிகளை நடத்திட ஆணையிட்டார்கள். அதன்படி, பேச்சு, எழுத்து என இரண்டிலும் தனி அடையாளத்துடன் வாழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞரின் சிறப்புகளை, பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடம் வளர்த்தெடுக்கும் வகையில், அனைத்து கழக மாவட்டங்களிலும் கழக மாணவர் அணியின் சார்பில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு மாவட்ட அளவிலான பேச்சுப் போட்டி மற்றும் கட்டுரைப் போட்டிகள் மிகச் சிறப்புடன் நடைபெற்று வெற்றி பெற்ற மாணவர்களுக்கும், பங்கேற்ற மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. அதனைத்தொடர்ந்து, மாவட்ட அளவில் தேர்வானவர்களுக்கு மாநில அளவில் “மாணவ நேசன் – முத்தமிழறிஞர் கலைஞர் 100 பேச்சும் எழுத்தும்” இறுதிப் போட்டிகளை வரும் பிப்ரவரி மாதத்தில் நடத்துவதென இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படுகிறது. மேலும், மாவட்ட அளவில் நடைபெற்ற பேச்சு மற்றும் கட்டுரை போட்டியில் வெற்றி பெற்றவர்களின் பட்டியலை உடனடியாக அளித்திட மாவட்ட அமைப்பாளர்களை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

**கல்லூரிகளில் உறுப்பினர்களை சேர்த்திடுவீர்!**

திராவிட இயக்கத்தின் கொள்கைப் பாதையில் மாணவர்களை ஒன்றிணைத்து, தாய் தமிழ் மொழிக்கு ஆபத்து என்று வந்த போது, இந்தி திணிப்பு எதிர்ப்பு போராட்டத்தில் தன்னுடன் பயின்ற பள்ளி நண்பர்களை ஒருங்கிணைத்து, ‘இளைஞர் மறுமலர்ச்சி அமைப்பு’ என்ற இயக்கத்தைத் தொடங்கி அதன் மூலம் இந்தி எதிர்ப்புப் பேரணிகளையும் இந்த அமைப்பின் மூலம் நடத்தினார். மேலும், தனது 17 வயதில், ‘தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம்’ என்ற அமைப்பை ஏற்படுத்தி, அதன் தலைவராகவும் தேர்வு செய்யப்பட்டார். முத்தமிழறிஞர் கலைஞர் உருவாக்கிய தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றமே, திராவிட இயக்கத்தின் முதல் மாணவர் அணி என்ற சிறப்பைப் பெற்றது. நமது கழகத்தின் மூத்த முன்னோடிகளாக இருந்து நம்மை வழிநடத்திய பேராசிரியர் பெருந்தகை க. அன்பழகன், நாவலர் இரா.நெடுஞ்செழியன், கே.ஏ.மதியழகன் உள்ளிட்ட திராவிட இயக்க முன்னோடிகள் இந்த அணியில் இணைந்து செயல்பட்டுள்ளனர். பெருமைமிகு கலைஞர் நூற்றாண்டில் நாம் வாழ்ந்து வரும் நமக்கு, மீண்டும் தமிழ் மாணவர் மன்றத்தை உருவாக்கிடும் பொன்னான வாய்ப்பினை நமது கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நமக்கு அளித்துள்ளார்.

கல்லூரிகளில் பயிலும் திராவிட இயக்க சிந்தனைக் கொண்ட மாணவர்களை ஒன்றிணைத்து, அரசியல் சார்பற்று கல்லூரி மாணவர்களின் தேவைகளை, பிரச்சினைகளையும் பூர்த்தி செய்யும் வண்ணம் செயல்படவும், தமிழ் மொழி, தமிழர் பண்பாடு, தமிழர் கலை உணர்வு, தமிழின தொன்மையும், பெருமைகளையும் இளைய தலைமுறையினர் அறியும் வண்ணம் செயல்படவும், பகுத்தறிவு – சுயமரியாதை– சமூகநீதி – சமத்துவம் ஆகிய கொள்கைகளை கருத்தியல் பரப்புரை செய்திடவும், மேலும் மாணவர்களிடம் திறன் மேம்பாட்டினை உருவாக்க பயிற்சிகளும், ஊக்குவிக்கும் வகையில் போட்டிகளையும் நடத்திடும் வகையில் இம்மன்றம் செயல்படும்.

எனவே, கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தமிழ்நாடு மற்றும் புதுவையில் உள்ள அனைத்து கல்லூரிகள் மற்றும் கல்லூரி விடுதிகளில் “தமிழ் மாணவர் மன்றம்” உருவாக்கிடும் பணியினை விரைவாக துவக்கிட இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

**மாணவர் அணியின் கடும் கண்டனங்கள்!**

இந்திய சமூகத்தில் ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு கல்வி மறுக்கப்பட்டு, கல்வி ஒரு சாதிக்கு மட்டும் இருந்த நிலையை மாற்றி எல்லோருக்கும் கல்வி வேண்டுமென 16.09.1921 அன்று நீதிக்கட்சி அரசு வகுப்புவாரி பிரதிநிதித்துவ அரசாணையை வெளியிட்டு, இந்திய சட்டமன்ற வரலாற்றில் முதன்முதலில் இட ஒதுக்கீடு முறையை அறிமுகப்படுத்தியது. 1928ஆம் ஆண்டு வகுப்புவாரி பிரதிநிதித்துவ சட்டம் நிரந்தரமாக்கப்பட்டது. இதனால், அரசியல் – கல்வி – வேலைவாய்ப்பு உரிமை அனைத்துத்தரப்பு மக்களுக்கும் கிடைத்தது!

வகுப்புவாரி உரிமையை எதிர்த்து இடை இடையே பல்வேறு வழக்குகள் தொடரப்பட்டு வந்த போது, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் பெரும் முயற்சியால் திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட திராவிட இயக்கங்கள் அதை வென்று காட்டி, அரசியல் அமைப்புச் சட்டத்தில் முதல் திருத்தத்தை கொண்டு வந்து எல்லோருக்கும் படிக்கிற உரிமையை மீட்டெடுத்துள்ளது.

வருணாசிரம அடிப்படையில், சாதியின் அடிப்படையில் ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பு போன்ற உரிமைகள் மறுக்கப்பட்டதோ, அதே முறையில் அவர்களுக்கு வழங்க வேண்டுமென்பதற்காக உருவாக்கப்பட்டது தான் இடஒதுக்கீட்டு கொள்கை.

அனைவருக்கும் அனைத்தும் கிடைக்கப் பெற வேண்டுமென்ற சமத்துவ நோக்கத்திற்காக கொண்டுவரப்பட்ட இடஒதுக்கீட்டை சிதைப்பதற்காக உள்நோக்கத்துடன், திட்டமிட்டே இடஒதுக்கீட்டுப் பிரிவில் தகுதியானவர்கள் இல்லை என்று கூறி, உயர்கல்வி நிறுவனங்களில் எஸ்.சி., எஸ்.டி, ஒ.பி.சி. பிரிவில் காலியாக உள்ள இடங்களை பொது பிரிவினரை கொண்டு நிரப்ப நினைப்பது மீண்டும் இடஒதுக்கீட்டு கொள்கையை ஒட்டு மொத்தமாக அழிப்பதற்கான பாசிச பா.ஜ.க. அரசின் அடித்தளம்.

வருணாசிரம, சனாதனத்தை தூக்கி பிடிக்கும் பா.ஜ.க. பெரும் சதி திட்டத்தை செய்து, பல்கலைக் கழக மானியக் குழுவிக்கு இல்லாத அதிகாரத்தை அவர்கள் உருவாக்க நினைப்பது ஒரு சதி திட்டமாகும்.

கடந்த டிசம்பர் 28-ல் இடஒதுக்கீடு ரத்து தொடர்பாக வரைவு அறிக்கை வெளியிட்டு, அதன் மீது ஜனவரி 28-க்குள் கருத்து தெரிவிக்கலாம் என்று சொல்லி அறிவிப்பு வெளியிட்டது யு.ஜி.சி. இடஒதுக்கீடு பற்றி முடிவெடுப்பதற்கு யு.ஜி.சி.க்கு எந்த அதிகாரமும் இல்லை என்பதை ஏன் இத்தனை நாள் ஒன்றிய பா.ஜ.க. அரசின் கல்வித்துறை அமைச்சர் மறுப்பு தெரிவிக்க மறந்திருக்கிறார். மறந்திருந்தார் என்றுச் சொல்வதை விட, குட்டி விட்டு ஆழம் பார்க்கலாம் என்ற ஒரு பெரும் சதி திட்ட நோக்கத்திலேயே இதை நிறைவேற்றி விடலாம் என்று காத்திருந்தனர்.

ஒவ்வொரு முறையும் இந்தியாவில் இட ஒதுக்கீட்டிற்கு எதிரான சதிகள் வருகிற போதும், அதை எதிர்த்து குரல் கொடுக்கின்ற மண்ணாக, போராடுகிற மண்ணாக தந்தை பெரியாரின் திராவிட இயக்க மண்ணாக தமிழ்நாடு விளங்குகிறது. அவர் வழியில், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இப்போதைய நமது கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இடஒதுக்கீட்டினை காத்து கொண்டிருக்கும் அரணாக விளங்குகிறார்கள்.

அந்தவகையில், இப்போதும் தமிழ்நாட்டிலிருந்து கிளம்பிய எதிர்ப்பு குரல் பா.ஜ.க.வை எச்சரித்துள்ளது. அதை உணர்ந்த பா.ஜ.க. அப்படி அறிவிக்கவில்லை என்று பின்வாங்கியுள்ளது. பா.ஜ.க.வின் சதிதிட்டத்தை தமிழ்நாடு விழிப்புணர்வோடு உணர்ந்து கொண்டதற்கான காரணம் திராவிட இயக்கம் தந்த கல்வியே! அந்த விழிப்புணர்வு இந்தியா முழுமையும் பெற வேண்டுமென்று கழகத் தலைவர் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.

இனியும் இதுபோன்ற இடஒதுக்கீட்டிற்கு எதிரான எந்த செயலையும் செய்ய பா.ஜ.க. அரசு முற்படக்கூடாது என தி.மு.க. மாணவர் அணி எச்சரிக்கிறது. அரசியல் அமைப்பு சட்டம் வழங்காத அதிகாரத்தை தனக்கு இருப்பதாக நினைக்கிற யு.ஜி.சியின் தலைவராக விளங்கும் ஜெகதீஷ்குமார் அறிவித்த அறிவிப்பு மிகப்பெரிய கண்டனத்திற்குரியது. யு.ஜி.சியை எதிர்த்தும், இடஒதுக்கீட்டிற்கு எதிரான தனது சதிதிட்டத்தை நிறைவேற்ற நினைக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு தி.மு.க. மாணவர் அணி கடும் கண்டனங்களை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# ஸ்பெயினில் முதலீட்டாளர்கள் மாநாடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

ஸ்பெயினுக்கும் தமிழ்நாட்டிற்கும் ஒரு மிகப்பெரும் ஒற்றுமை இருக்கிறது. காளை அடக்குதல் விளையாட்டு, ஸ்பெயினின் தேசிய விளையாட்டாகவும் பாரம்பரிய விளையாட்டாகவும் விளங்குகிறது. எங்கள் தமிழ்நாட்டிலும் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டு எமது கலாச்சாரத்தின் சின்னமாக, உலகப் புகழ் பெற்று விளங்குகிறது.

ஜல்லிக்கட்டு விளையாட்டு க்காகவே தனியாக ஒரு ஸ்டேடியம் கட்டி இருக்கிறோம். வருங்காலத்தில் தமிழ்நாட்டுக்கு நீங்கள் வரும் போது அதனைப் பார்க்கலாம்.

**பொருளாதார உறவுகளை வலுப்படுத்த வாரீர்!**

ஐரோப்பிய ஒன்றியத்திலேயே, நான்காவது பெரிய பொருளாதார நாடாக ஸ்பெயின் விளங்குகிறது. எட்டு 'ஃபார்ச்சூன் 500' நிறுவனங்கள் மற்றும் 20 'ஃபார்ச்சூன் 2000' நிறுவனங்களும், ஸ்பெயின் நாட்டைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படுகின்றன. தமிழ்நாட்டுடன் வணிக உறவு மேற்கொள்ளும் ஐரோப்பிய நாடுகளில், 6ஆவது பெரிய நாடாக ஸ்பெயின் உள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தில், நான்காவது பெரிய பொருளாதாரமாக ஸ்பெயின் திகழ்வது போல, இந்தியாவின் இரண்டாவது பொருளாதாரமாக தமிழ்நாடு விளங்குகிறது. இந்த இரண்டு பொருளாதாரங்களுக்கும் நிறைய தொடர்புகள் உள்ளன.

கெஸ்டாம்ப், கமேசா, ரோக்கா, உர்பேசர், இன்கிடீம், ஆம்ப்போ, பபேசா, ஆர்பினாக்ஸ், கோர்லான் ஆகிய முக்கிய ஸ்பானிஷ் நிறுவனங்கள் எங்கள் நாட்டில் தற்போது செயல்பட்டு வருகின்றன. இந்தப் பொருளாதார உறவுகளை மேலும் வலுப்படுத்திடும் விதமாக, உங்களுடைய முதலீடுகளை தமிழ்நாட்டில் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்வதற்காக நான் இங்கு வந்துள்ளேன்.

**தமிழ்நாட்டை நோக்கி நீங்கள் வரவேண்டும்!**

இதற்கு முன்பு ஐக்கிய அரபு நாடுகள், ஜப்பான், சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச் சென்று முதலீடுகளை ஈர்த்துள்ளேன். தொடர்ச்சியாக அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கும் செல்ல இருக்கிறேன். கடந்த ஜனவரி 7,8 ஆகிய நாட்களில் நாங்கள் நடத்திய உலக முதலீட்டாளர்கள் மாநாட்டுக்கு அமெரிக்கா, இங்கிலாந்து, சிங்க ப்பூர், ஜப்பான், கொரியா, பிரான்ஸ், ஆஸ்திரேலியா, ஜெர்மனி மற்றும் டென்மார்க் ஆகிய 9 நாடுகள் எங்களுடன் பங்குதாரர் நாடுகளாக இணைந்து இருந்தன.

மேற்கு ஆஸ்திரேலியா மற்றும் தைவான் பொருளாதார மற்றும் கலாச்சார நிறுவனங்களும் எங்களுடன் இணைந்து செயல்பட்டுள்ளார்கள். 30 நாடுகளைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் எங்கள் மாநாட்டுக்கு வந்திருந்தார்கள்.

★ மிகப் பெரும் தொழில் நிறுவனங்களான, ஹூண்டாய், டாடா போன்ற நிறுவனங்கள், தங்கள் முதலீடுகளை பன்மடங்கு அதிகரித்துள்ளன.

★ 130க்கும் மேற்பட்ட "ஃபார்ச்சூன் 500" நிறுவனங்கள், தமிழ்நாட்டில் தமது திட்டங்களை நிறுவியுள்ளதே தமிழ்நாட்டில் முதலீட்டுக்கான சிறந்த சூழல் அமைந்துள்ளதற்கு சான்று. இதன் தொடர்ச்சியாக ஸ்பெயின் நிறுவனங்களும் தமிழ்நாட்டை நோக்கி வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**இந்தியாவின் முன்னணி மாநிலம் தமிழ்நாடு!**

வாகனங்கள், குறிப்பாக மின்வாகனங்கள், மின்னணுக் கருவிகள், தோல் பொருள்கள், தோல் அல்லாத காலணிகள், ஆடைகள் போன்றவற்றின் உற்பத்தியிலும், தகவல் தொழில்நுட்பம், புது ப்பிக்கத்தக்க எரிசக்தி, உயர் மருத்துவ சேவைகள்போன்றபல்வேறுதுறைகளிலும் இந்தியாவின் முன்னணி மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்ந்து வருகின்றது.

இந்தத் துறைகளிலும், வான்வெளி மற்றும் பாதுகாப்பு, உயிர் அறிவியல் மற்றும் உயிரி தொழில்நுட்பம், மருந்துகள், உணவு பதப்படுத்துதல், உப்புநீக்கம் மற்றும் நீர் சுத்திகரிப்பு ஆகிய துறைகளில் உங்களின் மேலான முதலீடுகளை மேற்கொள்ளுமாறு, ஸ்பெயின் முதலீட்டாளர்களை நாங்கள் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் தொழில்களைத் துவங்க வரும் முதலீட்டாளர்களுக்கு அனைத்து உதவிகளையும் செய்வதற்கு தமிழ்நாடு அரசு காத்திருக்கிறது. பல்வேறு தொழில்களை மேற்கொள்ள உகந்த சூழலையும் திறன்மிக்க மனிதவளத்தையும் உறுதி செய்வதோடு, பல்வேறு தொழில் கொள்கைளின் கீழ் உயர் சலுகைகளையும் அளிக்க உள்ளோம். இவை குறித்து தொழில் துறை அமைச்சர் அவர்களும், அலுவலகர்களும் விரிவாக உங்களுக்கு எடுத்துரைக்க உள்ளார்கள். எனவே தங்களது முதலீடுகளை தமிழ்நாட்டில் மேற்கொள்ள வேண்டும் என்று மீண்டும் வேண்டி கேட்டுக் கொண்டு விடைபெறுகின்றேன்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அ.தி.மு.க. ஒன்றியச் செயலாளர் ராமச்சந்திரன் அக்கட்சியில் இருந்து விலகி அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தார். அவருக்கு பொன்னாடை அணிவித்து அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் வரவேற்றார். இந்த நிகழ்ச்சியில் தி.மு.க. மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் உமரிசங்கர், மாவட்ட கவுன்சிலர் செல்வகுமார் உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# தலைமைக் கழக அறிவிப்பு

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், 22-01-2024 அன்று மாலை 5 மணியளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், முரசொலி மாறன் வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற்றது. இதில் கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜனவரி21 அன்று சேலத்தில் நடைபெற்ற தி.மு.க. இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டில் எழுச்சியுரையாற்றும்போது தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் வழங்கிய அறிவுரையின்படி, நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகளான பொறுப்பு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட/ மாநகர / பகுதி/ ஒன்றிய/ நகர/ பேரூர் கழகச் செயலாளர்கள், தொகுதிப் பார்வையாளர்கள், மாநகராட்சி மேயர், துணை மேயர் மற்றும் மண்டலக்குழுத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள், நகர்மன்றத் தலைவர்கள், ஒன்றியக்குழுத் தலைவர்கள், பேரூராட்சித் தலைவர்கள் உள்ளிட்ட "நிர்வாகிகள் சந்திப்பு" கீழ்க்கண்ட அட்டவணைப்படி. சென்னை, அண்ணா சாலை, "அண்ணா அறிவாலயத்தில்" நடைபெறும்.

| தேதி | நேரம் | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|
| 31.01.2024 | காலை 9.00 மணி | இராமநாதபுரம், கடலூர் |
| 01.02.2024 | காலை 9.00 மணி | சிதம்பரம், மயிலாடுதுறை |
| | மாலை 3.00 மணி | நாகப்பட்டினம், தஞ்சாவூர் |
| 02.02.2024 | காலை 9.00 மணி | வேலூர், அரக்கோணம் |
| | மாலை 3.00 மணி | விழுப்புரம், கள்ளக்குறிச்சி |
| 03.02.2024 | காலை 10.00 மணி | வடசென்னை, தென் சென்னை |
| | மாலை 3.00 மணி | மத்திய சென்னை, திருபெரும்புதூர் |
| 04.02.2024 | காலை 9.00 மணி | திருவண்ணாமலை, ஆரணி |
| | மாலை 3.00 மணி | பெரம்பலூர், திருச்சி |
| 05.02.2024 | காலை 9.00 மணி | கரூர், திண்டுக்கல் |
| | மாலை 3.00 மணி | காஞ்சிபுரம், புதுச்சேரி |

குறிப்பு: அந்தந்த நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகள் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பாகவே அரங்கத்திற்குள் வந்து அமர்ந்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

### 48வது இந்திய சுற்றுலா பொருட்காட்சியை

# 2.77 லட்சம் பேர் பார்வையிட்டுள்ளனர்!

## அமைச்சர் கா.இராமச்சந்திரன் தகவல்!

சென்னை, ஜன.31 -

சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில் சுற்றுலாத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்த சுற்றுலா அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நேற்று (29.1.2024) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்து, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். க. மணிவாசகன், முதன்மை செயலாளர் /சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் /மேலாண்மை இயக்குநர் திருமதி.காகர்லா உஷா ஆகியோர் முன்னிலையில் சுற்றுலாத்துறை அமைச்சர் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேசுகையில் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கைகளால் இந்தியாவிலேயே தமிழ்நாடு அதிக அளவில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முன்னணி சுற்றுலாத் தலமாக முன்னேறி உள்ளது.

தமிழ்நாட்டிற்கு ஆண்டு முழுவதும் அதிக சுற்றுலா பயணிகள் வருகை தரும் வகையில் முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித்திட்டப் பணிகளை அறிவித்து செயல்படுத்தி வருகின்றார்கள்.

முதலமைச்சர் அவர்களின் திட்டங்களை பொது மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் அனைத்து துறைகளை சேர்ந்த அரங்கங்கள் அமைத்து தீவுத்திடலில் நடைபெற்று வரும் 48-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியினை 28.1.2024 வரை 2,77,876 நபர்கள் பார்வையிட்டுள்ளார்கள். 25.1.2024 முதல் 28.1.2024 வரை 4 நாட்களில் மட்டும் 94,352 நபர்கள் பார்வையிட்டுள்ளார்கள்.

சுற்றுலா வளர்ச்சித்திட்டப் பணிகள் குறித்த காலத்திற்குள் முடிவடைந்து மக்கள் பயன்பாட்டிற்கு வரும் வகையில் சுற்றுலா அலுவலர்கள் பணியாற்றிட வேண்டும். சுற்றுலா மேம்பாட்டுத் திட்டப்பணிகள், உலக சுற்றுலா பயணிகளின் விருப்பமான முக்கிய சுற்றுலாத்தலமாக தமிழ்நாட்டை உருவாக்கும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை துணை செயலாளர் எ.மணிக்கண்ணன், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொதுமேலாளர் திருமதி.இ.கமலா உள்பட சுற்றுலாத்துறை உதவி இயக்குநர்கள், சுற்றுலா அலுவலர்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மண்டல மேலாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

## திருவண்ணாமலை தெற்கு மாவட்ட அமைப்பாளர் நியமனம்!

### ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் இர.சீனுவாசன் மறைவெய்திய காரணத்தால், து.வேலு (274, ரேசன் கடைத் தெரு, தண்டராம்பட்டு அஞ்சல், திருவண்ணாமலை மாவட்டம்) அவர்கள் திருவண்ணாமலை தெற்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

**ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ.,**
செயலாளர்,
தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

### க.இராஜேந்திரன் தலைமையில்

# பண்ருட்டி நகரில் சமுதாய வளைகாப்பு!

## வி.கே.வெங்கட்ராமன் - முன்னணியினர் பங்கேற்பு!

பண்ருட்டி, ஜன. 31 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை ஒருங்கிணைந்து குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்டத்தின்கீழ் பண்ருட்டி மற்றும் அண்ணா கிராமம் வட்டாரம் சமுதாய வளைகாப்பு விழா KSR சக்கரபாணி செட்டியார் திருமண மஹாலில் அண்ணா கிராம குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி தனபாக்கியம் அவர்கள் வரவேற்புரையாற்றினார். பண்ருட்டி நகர மன்ற தலைவர் நகர கழக செயலாளர் க. இராஜேந்திரன் துவக்கி வைத்து வாழ்த்துரை வழங்கினார். மேலும் 200 கர்ப்பிணி பெண்களுக்கு சீர் வரிசைகள் வழங்கப்பட்டன அண்ணா கிராம ஒன்றிய செயலாளர் ஆத்மா குழு தலைவர் வி.கே வெங்கட்ராமன் சிறப்புரை யாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் ஆனந்த் சரவணன், நெல்லிக்குப்பம் நகர மன்ற தலைவர்ஜெயந்தி ராதாகிருஷ்ணன் , பண்ருட்டி நகர மன்ற துணை தலைவர் சிவா. நெல்லிக்குப்பம் நகர மன்ற துணைத் தலைவர் கிரிஜா திருமாறன்,

நகர அவை தலைவர் ராஜா, நகர பொருளாளர் ராமலிங்கம், மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் பரணி சந்தர், நகர துணை செயலாளர் கௌரி அன்பழகன், மருங்கூர் வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் கே அறிவொளி, பண்ருட்டி குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி பவானி நன்றியுரை ஆற்றினார்.

மற்றும் கர்ப்பிணி பெண்கள், தாய்மார்கள், குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர்கள் ஊழியர்கள், கழக நிர்வாகிகள், நகர மன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

### கழக துணை அமைப்புச் செயலாளர்

## தாயகம் கவி எம்.எல்.ஏ. மாமியார் திருமதி சந்திராம்மாள் மறைவு!

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜன.31 -

கழகத் துணை அமைப்புச் செயலாளர் தாயகம் கவி எம்.எல்.ஏ.வின் மாமியார் திருமதி சந்திராம்மாள் அவர்களின் மறைவு செய்தியறிந்து கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:

கழகத் துணை அமைப்புச் செயலாளர் திரு. வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி அவர்களின் மாமியாரும், செய்தித் துறையில் உதவி இயக்குநராக பணிபுரியும் திருமதி.கமலா அவர்களின் தாயாருமான திருமதி. சந்திராம்மாள் (வயது 89) நேற்று (29/1/2024) பிற்பகல் மறைந்தார் என்ற செய்தியறிந்து மிகவும் வருந்துகிறேன்.

திருமதி.சந்திராம்மாள் அவர்களை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.




இராமநாதபுரம் மாவட்ட தி.மு.க. சார்பாக அரண்மனை முன்பு மத நல்லிணக்க உறுதி ஏற்பு நிகழ்ச்சி மாவட்ட செயலாளர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., தலைமையில் நடைபெற்றது இதில் அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் முன்னிலை வகித்தார். இதில், முருகேசன் எம்.எல்.ஏ., சத்தியமூர்த்தி, கே.நவாஸ்கனி எம்.பி., இன்பா ரகு, எம்.எஸ்.கே.பவானிராஜேந்திரன், ராஜாராம் பாண்டியன், செல்லத்துரை, அப்துல்லா, ஆர். கே .கார்மேகம், பிரவீன் தங்கம், கே.கருப்பையா, மிசா அகமது தம்பி, பிரவீன் தங்கம், சேது கருணாநிதி, குணசேகரன், ஜீவரத்தினம், கே.ஜே.பிரவீன், முத்துக்குமார், உதயகுமார், சண்முகநாதன், மாயகிருஷ்ணன், ஜெயக்குமார், பஷீர் அகமது, ஷாஜகான், மற்றும் கூட்டணி கட்சி மாவட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் தளபதி மு க ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை ஒருங்கிணைந்து குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்டத்தின்கீழ் பண்ருட்டி மற்றும் அண்ணா கிராமம் வட்டாரம் சமுதாய வளைகாப்பு விழா அண்ணா கிராம குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி தனபாக்கியம் வரவேற்புரையாற்றினார். பண்ருட்டி நகர மன்ற தலைவர் நகர கழகச் செயலாளர் க.இராஜேந்திரன் துவக்கி வைத்தார். 200 கர்ப்பிணி பெண்களுக்கு சீர் வரிசைகள் வழங்கப்பட்டன. வி.கேவெங்கட்ராமன் சிறப்புரையாற்றினார். ஆனந்த், சரவணன், ஜெயந்தி, ராதாகிருஷ்ணன், சிவா, கிரிஜா திருமாறன், ராஜா. ராமலிங்கம், பரணி சந்தர், கௌரி அன்பழகன் டாக்டர் கே.அறிவொளி, திருமதி பவானி மற்றம் பலர் கலந்து கொண்டனர்.



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் மதுரை மாவட்டம் ஒத்தக்கடை வேலம்மாள் குளோபல் மருத்துவமனை வளாகத்தில் பள்ளிக் கல்வித்துறை , தமிழ்நாடு மாநில பெற்றோர் ஆசிரியர் கழகம் நடத்தும் பெற்றோர்களை கொண்டாடுவோம் முதல் மண்டல மாநாட்டு நிகழ்ச்சியை குத்து விளக்கேற்றி துவக்கி வைத்து பள்ளிகளுக்கு நன்கொடை வழங்கியவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கி கௌரவித்த போது எடுத்தபடம். உடன் பள்ளிக் கல்வித்துறை செயலாளர் குமரகுருபரன், மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா, சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன், மாநகராட்சி துணை மேயர் நாகராஜன் ஆகியோர் உள்ளனர்.

### குடியரசு தின விழாவில்

# “அண்ணா விருது” பெற்ற காயல்பட்டினம் மீனவர்!

## அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் பாராட்டினார்!

திருச்செந்தூர், ஜன. 31-

நெல்லை மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் கடந்த மாதம் பெய்த கனமழையில் திருச்செந்தூர் வருவாய் கோட்டத்திலும் வெள்ள பாதிப்பு அதிக அளவு ஏற்பட்டது. இந்நிலையில் ஆத்தூர் அருகே உள்ள தண்ணீர் பந்தல் கிராம மக்கள் மழை வெள்ளத்தில் பாதிக்கப்பட்டனர். இதையடுத்து

காயல்பட்டினம் அருகே சிங்கித்துறையைச் சேர்ந்த மீனவரான சீனிகனி மகன் யாசர் அராபத் (38) தலைமையில் 15 பேர் கொண்ட குழுவினர் தனி படகில் சென்று அப்பகுதி மக்கள் 253 பேரை மீட்டனர். இதற்காக கடந்த குடியரசு தினத்தன்று வீரதீர செயலுக்காக யாசர் அராபத்துக்கு தமிழக முதல் அமைச்சர் ஸ்டாலின் அவர்கள் அண்ணா விருது மற்றும் ரூ.1 லட்சம் நிதியுதவி வழங்கினார். இதையடுத்து திருச்செந்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நேற்று யாசர் அராபத்தை தமிழக மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் பாராட்டினார்.

நிகழ்ச்சியில், தி.மு.க. மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் உமரி சங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ராமஜெயம், திருச்செந்தூர் ஒன்றிய செயலாளர் செங்குழி ரமேஷ், நகராட்சி கவுன்சிலர்கள் செந்தில்குமார், சுகு, நகர செயலாளர் வாள்சுடலை, காயல்பட்டினம் நகராட்சி தலைவர் முத்து முகமது, மாவட்ட சுற்றுச்சூழல் அணி தலைவர் சிவசுப்பிரமணியன், மாவட்ட துணை அமைப்பாளர்கள் வக்கீல் சாத்ராக், கேடிசி முருகன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### செஞ்சி தொகுதி தி.மு.க. சார்பில்

# மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீர வணக்கநாள் பொதுக்கூட்டம்!

## செஞ்சி ஒன்றியம் - அப்பம்பட்டியில் நடைபெற்றது!

செஞ்சி, ஜன. 31-

தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்ற தொகுதி தி.மு.க. மாணவரணி சார்பில் மொழிப் போர்த் தியாகிகளுக்கு வீர வணக்க நாள் பொதுக் கூட்டம் செஞ்சி ஒன்றியம் அப்பம்பட்டு கலைஞர் திடலில் நடைபெற்றது.

மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பிரசன்னா தலைமை தாங்கினார். செஞ்சி ஒன்றிய பெருந்தலைவரும். தலைமைச் செயற்குழு உறுப்பினர் செஞ்சி கிழக்கு ஒன்றியச் செயலாளர் விஜயகுமார் அனைவரும் வரவேற்றார். தலைமைச் செயற்குழு உறுப்பினரும்,மேல்மலையனூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் நெடுஞ்செழியன் துவக்க உரை நிகழ்த்தினார்.

மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் ஞானசேகரன், பெனாசிர்,ஒன்றிய நிர்வாகிகள் திருமாவளவன், ஒன்றிய அவைத் தலைவர் ஆறுமுகம்,நிர்வாகிகள் கணேசன், பழனி, அன்வர்சயீத், காந்தி, பாலமுருகன், முரளி, சீதாராமன், நாகராஜன், முனுசாமி, சங்கர், சுரேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் மாநில சுற்றுச்சூழல் அணி தலைவர் டாக்டர் பூங்கோதை ஆலடி அருணா, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான், தலைமைக் கழக பேச்சாளர் உடுமலை தாமரை சிவா ஆகியோர்கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

கூட்டத்தில் மாநில சுற்றுச்சூழல் அணி தலைவர் பூங்கோதை ஆலடி அருணா பேசுகையில்:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவு தினங்கள் ஜனவரி 25ஆம் நாள் மொழிப்போர்த் தியாகிகள் தினம் அனுசரிக்கப்படுகிறது.

தமிழ் மொழியை மீட்டு எடுத்ததால் தான் தமிழ் நாட்டில் தி.மு.க. ஆட்சி அமைத்தது அதனால் தான் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக திகழ்கிறது.

இந்தியாவில் ஆண்டு கொண்டிருக்கும் பா.ஜ.க. வான ஒன்றிய அரசு மதத்தை வைத்து அரசியல் செய்கின்றனர்.

அவர்களை வீட்டுக்கு அனுப்புவதற்கு எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் புதுவை உட்பட தமிழ்நாட்டில் உள்ள 40 தொகுதிகளிலும் நாம் வெற்றி பெற வேண்டும்.

சமஸ்கிருதம் மொழிக்கு ஒன்றிய அரசு 600 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது.

ஆனால் தமிழ்நாட்டுக்கு வெறும் 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணி வெற்றி பெற்று தமிழ்நாட்டிற்கு அதிக நிதி ஒதுக்கீடு பெறுவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் வழிவகை செய்வார்கள் என பெருமைப்பட தெரிவித்தார்.

கூட்டத்தில் ஒன்றிய செயலாளர்கள் விஜயராகவன், பச்சையப்பன், சாந்தி சுப்ரமணியன், பொதுக்குழு உறுப்பினர்கள் மணிவண்ணன், செல்வராஜ், பேரூராட்சி மன்றத் தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், மாவட்டக் கவுன்சிலர் அரங்க ஏழுமலை, துணை சேர்மன்கள் ஜெயபாலன், விஜயலட்சுமி முருகன், நகரச் செயலாளர்கள் கார்த்திக், மாவட்டக் கவுன்சிலர் செல்வி ராம சரவணன், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர்கள் ராஜலட்சுமி செயல்மணி, மாவட்ட சிறுபான்மையினர் அணி துணை அமைப்பாளர் மாத்தூர் தாஸ், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திலகவதி, மாவட்டப் பிரதிநிதிகள் கோடீஸ்வரன், ரவி,நிர்வாகிகள் அண்ணாதுரை, மணிவண்ணன், வாசு பழனி செந்தில் பழனி அல்லி முத்து, சீதாராமன், என். ஆர்.பேட்டை பாலு, ராமு, தொண்டரணி பாஷா உள்ளிட்டோர்கலந்து கொண்டனர்.செஞ்சி ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் அய்யாதுரை நன்றி கூறினார்.



தூத்துக்குடி போல்பேட்டை மேற்கு பகுதியில் தனது சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ. 3 லட்சத்து 52 ஆயிரம் மதிப்பீட்டில் கழிவுநீர் வடிகால் அமைக்கும் பணியை சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பெ.கீதாஜீவன் துவக்கி வைத்தார். உடன் மாநகர தி.மு.க. செயலாளர் ஆனந்தசேகரன், மாவட்டப் பிரதிநிதி செல்வகுமார், மாமன்ற உறுப்பினர் திருமதி.ஜாக்குலின் ஜெயா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. மற்றும் தோழமைக் கட்சிகளின் சார்பில் நடைபெற்ற ஜனவரி 30 மதவெறி மாய்ப்போம் மனிதநேயம் காப்போம் மதநல்லிணக்க உறுதிமொழி நாளில் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி, முத்துகடை பேருந்து நிலையத்தில் உறுதிமொழி ஏற்பு விழாவில் கலந்து கொண்டார். இதில் கழக சுற்றுச்சூழல் அணி மாநிலத் துணைச் செயலாளர் ஆர்.வினோத் காந்தி உறுதி ஏற்பு மொழியை படித்தார். ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன், வேலூர் பேராலயத்தின் தலைவர் சர்மா நித்தியானந்தம், மௌலானா அபுபக்கர், தவத்திரு சச்சிதானந்த சுவாமிகள், தவத்திரு சி.சி.மோகனானந்த சுவாமிகள் மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள், செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### திண்டிவனம் தலைமை அரசு மருத்துவமனையில்

# புதிய மருத்துவமனைக் கட்டிடங்கள் கட்டும் பணி!

## அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் - செஞ்சி மஸ்தான் நேரில் ஆய்வு!

திண்டிவனம், ஜன. 31 -

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சிறுபான்மையினர் நலன் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆகியோர், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சி.பழனி தலைமையில், திண்டிவனம் தலைமை அரசு மருத்துவமனையில், புதிய மருத்துவமனை கட்டிடங்கள் கட்டப்பட்டு வருவதை நேற்று முன்தினம் (29.01.2024) பார்வையிட்டு, ஆய்வு செய்தனர்.

அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன்,செஞ்சி மஸ்தான் ஆகியோர் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2022 ஜனவரி திங்களில், தமிழ்நாட்டில் 25 புதிய மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் அறிவிக்கப்பட்டது. ஏற்கனவே, தமிழகத்தினை பொறுத்தவரை 19 இடங்களில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் இருந்தது. தமிழ்நாடு முதலமைச்சர், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் அதிக எண்ணிக்கையில் வர வேண்டும் என்பதன் அவசியம் கருதி, 19 புதிய மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளும், 6 இடங்களில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு இணையாக அமைக்கப்படும் என்று அறிவித்தார் . அதனடிப்படையில் இதற்காக ரூ.1,100 கோடி நிதி ஒதுக்கீடும் செய்துகொடுத்துள்ளார்கள். அந்த வகையில், தமிழ்நாட்டில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளுக்கான கட்டமைப்பு பணிகள் வேகமாக நடைபெற்ற வண்ணம் உள்ளன.

விழுப்புரம் மாவட்டத்தை பொறுத்தவரை, முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையினை தொடர்ந்து, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று, முதலமைச்சர் அவர்கள் திண்டிவனத்தில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை அமைத்திட உத்தரவிட்டார்கள். மேலும், இதன் கட்டமைப்பினை அதிகரித்திட வேண்டும் என்ற நோக்கத்தில் ரூ.60.00 கோடி மதிப்பீட்டில் புதியதாக மருத்துவமனை கட்டங்கள் கட்டுவதற்கும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். தற்பொழுது, இதற்கான கட்டுமானப்பணிகள் விரைவாக நடைபெற்று கொண்டிருக்கிறது.

திண்டிவனம் அரசு தலைமை மருத்துவமனையில், ரூ.60.00 கோடி மதிப்பீட்டில், தரைத்தளம் மற்றும் ஐந்து தளங்கள் தலா 1935.00 ச.மீ பரப்பளவு வீதத்திலும், சாய்தள பரப்பு 700.00 ச.மீ, இணைப்பு பகுதி 95.00 ச.மீ என மொத்தம் 12,475 ச.மீ பரப்பளவில் அமையவுள்ளது. இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் தளங்களில் 1,000 ச.மீ பரப்பளவில் மகப்பேறு மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை கட்டடமும், தரைத்தளத்தில் 166.00 ச.மீ பரப்பளவில் பிணவறைக் கட்டடமும், 63.00 ச.மீ பரப்பளவில் எச்.டி அறையும் கட்டப்பட்டு வருகிறது.

திண்டிவனம் அரசு தலைமை மருத்துவமனையில் கட்டிடப்பணிக்காக ரூ.40.00 கோடியும், ரூ.20.00 கோடி மதிப்பீட்டில் மருத்துவமனை இயந்திரங்கள் மற்றும் உள்கட்டமைப்பு தேவைக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புதிய மருத்துவமனை கட்டிடத்தில், தரைதளத்தில், காத்திருப்பு பகுதி, மருந்தகம், எக்ஸ் கதிர், எம்.ஆர்.ஐ. ஸ்கேன் மற்றும் வி.டி. ஸ்கேன், கோப்புகள் அறை, புறநோயாளிகள் வார்டு, மீட்பு அறை, மருத்துவர் அறை, அவசர சிகிச்சைப் பிரிவு, விபத்து பிரிவு, காவலர் விசாரனை பிரிவு, பதிவறை, பணி நேர மருத்துவர் அறை, பணிநேர செவிலியர் அறை, கழிவறையும், முதல் தளத்தில், சிகிச்சை அறை, மருத்துவக் கருவிஅறை, பணிநேர மருத்துவர்கள் அறை, பணி நேர செவிலியர்கள் அறை, தனிமைப்படுத்தப்பட்ட அறை, குழந்தைகள் தீவிர சிகிச்சை பிரிவு, தீவிர சிகிச்சை பிரிவு, இரண்டாம் தளத்தில், சிகிச்சை அறை, மருத்துவக்கருவிகள் அறை, பணிநேர மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் அறை, மருத்துவ வார்டு, சேமிப்பு அறை, சரக்கறை, குழந்தைகள் தீவிர சிகிச்சைப் பிரிவு, உயர்சார்பு அலகு குழந்தைகள் பிரிவு, உயர்சார்பு அலகு வார்டு, தனிமைப்படுத்த அறை, கழிவறை, மூன்றாம் தளத்தில், சிகிச்சை அறை, மருத்துவக் கருவிகள் அறை, பணிநேர மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் அறை, மருந்தகம், தனிமைப்படுத்தப்பட்ட அறை, அறுவை சிகிச்சைக்குப்பின் வார்டு (குழந்தைகள்), நான்காம் தளத்தில், மீட்பு அறை, நோயாளிகள் கண்காணிப்பு அறை, பணிநேர செவிலியர் அறை, பரிசோதனை அறை, சரக்கறை, கருத்தடை மற்றும் சுத்தம் செய்யும் அறை, அறுவை சிகிச்சை தியேட்டர் 5 எண்கள், கழிவறை, ஐந்தாம் தளத்தில், கருத்தரங்கு அறை, காத்திருப்பு அறை, எம்.ஆர்.டி அறை, அறுவை சிகிச்சை அறை, தீப்புண் சிகிச்சைப் பிரிவு, தனிமைப்படுத்தப்பட்ட அறை கழிவறை போன்ற பல்வேறு பிரிவுகளுடனும், மின் தூக்கி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதிகளுடன் மருத்துவமனை கட்டடம் அமையவுள்ளது.

திண்டிவனம் ஒட்டிய கிராமப்புற பகுதிகளைச் சேர்ந்தவர்கள் அவசர மருத்துவ என்றால் விழுப்புரம் அல்லது புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையினை நாடிச்செல்கின்ற நிலை இருந்து வந்தது. தற்பொழுது திண்டிவனத்தில் மாவட்ட அரசு தலைமை அமைக்கப்பட்டு தரம் உயர்த்தப்பட்டு வருவதால், இப்பகுதியினைச் சேர்ந்த மக்கள் இந்த மருத்துவமனைகளிலே சிகிச்சை பெற்றுச்செல்கின்ற நிலை உருவாக உள்ளது என அமைச்சர்கள் தெரிவித்தனர்.

இந்நிகழ்வில், திண்டிவனம் சார் ஆட்சியர் திவ்வாயன்ஷி நிகம், திண்டிவனம் நகர்மன்ற தலைவர் திருமதி ஆர்.நிர்மலா, இணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.லட்சுமணன், துணை இயக்குநர் (சுகாதார நலப்பணிகள்) மரு.செந்தில்குமார், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திரு.பரிதி, திண்டிவனம் நகராட்சி ஆணையர் திருமதி தமிழ்ச்செல்வி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### பேரறிஞர் அண்ணா 55வது நினைவு நாள்

# பிப்.3 அன்று அமைதிப்பேரணி!

## மதுரை மாநகர் மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

மதுரை, ஜன.31-

மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ் மொழி உயர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ்நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் “பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு” வரும் 03.02.2024 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. தலைமையில் நெல்பேட்டை அறிவகத்தில் இருந்து பேரணியாகச் சென்று “பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச்சிலைக்கு” மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிக் கழக, வட்டக்கழக செயலாளர்கள், ஒன்றிய, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள், அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கோ.தளபதி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



மதுரை மாநகர் மாவட்டம் பசுமலையில் கழகத்தின் மூத்த முன்னோடி சுபாஷ் சந்திரபோஸ், மற்றும் கழகச் செயல்வீரர் பசுமலை எஸ்.பி.கணேசன் ஆகியோரின் புதிய இல்லத்தை மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., திறந்து வைத்தார். இதில் வழக்கறிஞர் ஆர்.கே.நகர் என்.மருதுகணேஷ், திருப்பரங்குன்றம் பகுதிச் செயலாளர் கிருஷ்ண பாண்டி, மதுரை 93வது வட்டச் செயலாளர் எம்.ஜெயராமன், 95வது வட்டச் செயலாளர் எம்.ஆர்.பி. ஆறுமுகம், ஆனையூர் பகுதி பாக முகவர் எஸ்.இராஜா, திருப்பரங்குன்றம் பகுதிக் கழகச் செயல்வீரர் எஸ்.பாண்டியன் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# ராமராஜ்யம் என்று காந்தி சொன்னதும், இந்துத்துவம் சொல்வதும் ஒன்றா?


**ராஜன் குறை கிருஷ்ணன்**
*பேராசிரியர்*
*அம்பேத்கர் பல்கலைக் கழகம், புதுடெல்லி.*




இந்த ஜனவரி 30ஆம் நாள் காந்தி கொல்லப்பட்டு எழுபத்தாறு ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன. இந்தியாவின் ஆகப்பெரிய அரசியல் படுகொலை அது. இந்து மகா சபா, ஆர்.எஸ்.எஸ் ஆகிய அமைப்புகளுடன் தொடர்புகொண்டு இயங்கியவரும், சாவர்க்கரின் சீடருமான விநாயக் நாதுராம் கோட்சே என்பவரால் முழுக்க முழுக்க அரசியல் சித்தாந்தம் காரணமாக செய்யப்பட்ட கொலை அது.

காந்தி ராமராஜ்யம் என்ற லட்சிய அரசமைப்பை பிரபலப்படுத்தியவர். இந்திய அரசாட்சி ராமராஜ்யம் போல நடக்க வேண்டும் என்றார். ஆனால், அவரை கொல்லுமளவு வன்மம் கொண்ட இந்துத்துவ சக்திகளும் ராமரைத்தான் தங்கள் அரசியலின் முக்கிய குறியீடாகக் கொண்டன. அயோத்தியில் பாபர் மசூதி இருந்த இடம்தான் ராமர் பிறந்த பூமி என்று சொல்லி, 1949ஆம் ஆண்டு அதற்குள் சிலைகளை இரவோடிரவாக கொண்டு போய் வைத்தனர். இதில் முக்கிய பங்காற்றியதாகக் கருதப்படும் திக்விஜய்நாத் என்ற கோரக்பூர் மடாதிபதி, காந்தி இறப்பதற்கு இரண்டு நாட்கள் முன்பு அவரை கொல்பவர்களுக்கு பரிசளிப்பதாக டெல்லியில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசியவர். அதற்காக கைது செய்யப்பட்டவர்.

அன்று தொடங்கிய ராம ஜென்ம பூமி பிரச்சினையில், 1992ஆம் ஆண்டு அந்த மசூதியை கரசேவகர்கள் இடித்துத் தரை மட்டம் ஆக்கினார்கள். அதன் பின் நடந்த நீண்ட நாள் வழக்கின் இறுதியில் உச்ச நீதிமன்றம் அந்த இடத்தில் கோயில் கட்ட அனுமதி அளித்தது. அதனடிப்படையில் அந்த இடத்தில் ஒரு பிரம்மாண்ட கோயிலைக் கட்டி திறந்து வைத்துள்ளார்கள். அந்த விழாவில் பேசிய ஆர்.எஸ்.எஸ் தலைவர் மோகன் பகவத், ராமராஜ்யம் தொடங்கி விட்டதாகக் கூறியுள்ளார்.




இப்படி ராமரையும், ராமராஜ்யத்தையும் வைத்து காந்தீயம், இந்துத்துவம் என்ற எதிரும், புதிருமான தீவிரமாக முரண்பட்ட இரண்டு சிந்தனைகள் உருவானது எப்படி? தன்னையறியாமலேயே காந்தி இந்துத்துவத்தின் பிரச்சாரத்துக்கு வலு சேர்த்துவிட்டாரா? இந்த பின்னணியை எப்படிப் புரிந்து கொள்வது?

**வெகுமக்களின் மொழி**


ராமாயணம், மகாபாரதம் ஆகிய இரண்டு இதிகாசக் கதைகளும் இந்திய மக்களிடையே வாய்மொழியாகப் பரவலானவை. பல ஊர்களிலும் தல புராணங் களில் இங்கே ராமர் வந்தார், அனுமார் வந்தார், பாண்டவர்கள் வந்தார்கள் என்று கதை சொல்வது வழக்கம். ஏதோவொரு பெரிய பாறை இருந்தால் அது பீமன் கொண்டு வந்து போட்டது, அனுமார் கொண்டு வந்து போட்டது என்று கூறிவிடுவார்கள்.



வால்மீகி எழுதிய வடிவிலோ, வியாசர் எழுதிய வடிவிலோ பெரும்பாலோருக்கு இந்த இதிகாசக் கதைகள் தெரியாது என்றாலும், ஏதோவொரு வடிவில் இந்தக் கதைகளை பலரும் கேட்டிருப்பார்கள். வட நாட்டில் துளசிதாசர் பதினாறாம் நூற்றாண்டில் எழுதிய ராமாயணம் பரவலாக அறியப்பட்டது. கபீர்தாஸ் போன்ற மகான்களும் ராமர் பெயரை பிரபலப்படுத்தி யுள்ளார்கள். ஜைன மதம், புத்த மதம் ஏன் இஸ்மாயிலி முஸ்லிம்களும்கூட ராமாயண கதைகளை உருவாக்கி உள்ளார்கள்.

ராமர் கதையில் பொதுவாக அவரது சிறப்பம்சம் என்னவென்றால் அவர் முடிசூட்டப்படும் தருணத்தில் அரச பதவி அவரிடமிருந்து பறிக்கப்படுவதையும், வனவாசத்துக்குச் செல்வதையும் அவர் மனதார ஏற்றுக்கொள்வதுதான். மனைவியைப் பறிகொடுக்கிறார், மீட்கிறார். யாரையும் நொந்து கொள்வதில்லை. வனவாசம் முடிந்து அயோத்திக்கு மீண்டு அரசாட்சியை ஏற்றுக்கொள்கிறார். ஒரு லட்சிய புருஷராக வடிவமைக்கப்பட்டுள்ளார்.

**காந்தி வெகுமக்கள் புரிந்துகொள்ளும் மொழியில் தன்னுடைய அரசியலைப் பேச விரும்பி னார். அதனால் தான் விரும்பும் லட்சிய அரசாட்சியை ராம ராஜ்யம் என்று அழைத்தார். அதை அவர் இந்துக்களின் ஆட்சியாகவோ, இந்துக்களுக்கான ஆட்சியாகவோ சிந்திக்கவில்லை. அனைத்து எளிய மனிதர்களுக்கும் நீதி கிடைக்கும் அறம் சார்ந்த ஆட்சியையே அவர் ராமராஜ்யம் என்று அழைத்தார்.**




அவரைப் பொறுத்தவரை ராமும், ரஹீமும் ஒன்றுதான் என்று கூறினார். இறைவனை எந்த பெயரில் அழைத்தாலும் ஒன்றுதான் என்றார். அவருடைய ஆசிரமத்து பஜனையில் "ரகுபதி ராகவ ராஜாராம், பதீத பாவன சீதாராம்" என்ற வரிகளுடன் "ஈஷ்வர அல்லா தேரோ நாம்" என்ற வரியையும் சேர்த்துப் பாட வைத்தார்.

காந்தியைப் பொறுத்தவரை ராமாயணம், மகாபாரதம் ஆகியவை உருவகக் கதைகள். அதில் வரும் போர்கள், வன்முறை ஆகியவற்றை ஒருவரது உள்ளத்தினுள் இருக்கும் நல்ல எண்ணங்கள், தீய எண்ணங்கள் ஆகியவற்றுக்கு இடையிலான போராகப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் கொண்ட வர். காந்தி எந்த லட்சியத்துக்காகவும் வன்முறையைக் கைகொள்ளக் கூடாது என்ற அகிம்சை மார்க்கத்தையே மனதார நம்பியவர். வன்முறைக்கு ஆதாரமாக உள்ள சுயநலம், பேராசை, இச்சைகள் ஆகிய அனைத்தையும் ஒருவர் களைய வேண்டும், மனத்தின்கண் மாசிலனாக வேண்டும் என்று வலியுறுத்தியவர்.

**இந்துத்துவம் நேசித்த வரலாறும், வன்முறையும்**

சாவர்க்கர் உள்ளிட்ட இந்துத்துவர்கள் அகிம்சை என்பது கோழைத்தனம் என்று கருதினார்கள். காந்தி இந்துக்களையும், இந்தியர்களையும் கோழைகளாக மாற்றுகிறார் என்று குற்றம் சாட்டினார்கள். சாவர்க்கர் ஆங்கிலேயர்களுக்கு எதிரான தனிநபர் கொலைகளை ஆதரித்தார். கர்சன் வைலி என்ற பிரிட்டிஷ் அதிகாரியை லண்டனில் மதன்லால் திங்கரா என்ற இந்திய மாணவர் 1909ஆம் ஆண்டு சுட்டுக் கொன்றபோது அதை ஒரு தேசபக்த செயல் என்று கூறினார் சாவர்க்கர். காந்தியோ அதுபோன்ற கொலைகளை வன்மையாகக் கண்டித்தார்.

சாவர்க்கர் ராமர், கிருஷ்ணர் போன்ற தெய்வங்கள் எதிரிகளை போரிட்டுக் கொன்ற வீரபுருஷர்கள் என்றே கருதினார். நாட்டினை அடிமைப் படுத்தியுள்ள ஆங்கிலேயர்களுக்கு எதிராக ஆயுதம் ஏந்தி போராடுவது தவறில்லை என்று கருதினார். மதன் லால் திங்கரா செய்த கொலைக்குப் பிறகு காந்தியும், சாவர்க்கரும் லண்டனில் நிகழ்ந்த விழா ஒன்றில் முதலும் கடைசியுமாக சந்தித்தனர். அவர்களது மாறுபட்ட சிந்தனைகளை உரைகளாக நிகழ்த்தி னர்.

அந்தச் சந்திப்பைத் தொடர்ந்துதான் காந்தி "இந்து சுவராஜ்யம்" என்ற நூலினை எழுதினார். அதில் ஆங்கிலேயர்கள் நாட்டை ஆள்வது பிரச்சினையில்லை. இந்தியர்களின் வாழ்க்கை முறையை மாற்றியமைப்பதுதான் பிரச்சினை என்றார். உதாரணமாக கைத்தறி துணிகளை நெய்து உடுப்பதுதான் பல கோடி இந்தியர்களுக்கு சுலபமானது, அவர்களை மில்களில் இயந்திரங்கள் மூலம் தயாரான துணிகளை அணியும்படி செய்வது அவர்களது சுயேச்சை யான பொருளாதாரத்தைச் சீர்குலைப்பது என்று காந்தி கருதினார்.

இந்துத்துவர்களுக்கு ஆட்சியை ஆங்கிலேயர்களிடமிருந்து பறிப்பது முக்கியமானதாக இருந்தது. இந்து நாளடைவில் இந்து அடையாளவாதமாக மாறி, இஸ்லாமியர்களுக்கு எதிரானதாக பரிணமித்தது. ஆங்கிலேய எதிர்ப்பைவிட, இஸ்லாமியர்கள் மீண்டும் அதிகாரமிக்கவர்களாக மாறக் கூடாது என்பது அவர்களுடைய அரசியலின் மையமாக மாறியது.

காந்தியோ கிலாஃபத் இயக்கத்தை ஆதரித்ததுடன், இந்துமுஸ்லிம் ஒற்றுமையை வலியுறுத்தத் தொடங்கினார். வெகுமக்களை அரசியல் மையப்படுத்துவதிலும், காங்கிரஸ் கட்சியை நாடு முழுவதும் வேர்விடச் செய்வதிலும் பெரும் வெற்றி பெற்றார். காந்தியின் ஆசிரம வாழ்க்கை, மேலாடை களைந்தது, அவரது அகிம்சை, பக்தி நெறி ஆகியவை எல்லாம் சேர்ந்து அவரை புனிதராக, மகாத்மாவாக மக்களை கொண்டாட வைத்தது. அவர் தொடர்ந்து ராமரை ஒரு புனித உருவகமாகக் கூறி வந்தார். ராமர் உண்மையில் வாழ்ந்தாரா, இல்லையா என்பது காந்திக்கு முக்கியமானதல்ல. அவர் ஒரு காவிய பாத்திரம், லட்சிய உருவகம் என்பதே அவருக்கு முக்கியம்.

> **கா**ந்தியைப் பொறுத்தவரை ராமாயணம், மகாபாரதம் ஆகியவை உருவகக் கதைகள். அதில் வரும் போர்கள், வன்முறை ஆகியவற்றை ஒருவரது உள்ளத்தினுள் இருக்கும் நல்ல எண்ணங்கள், தீய எண்ணங்கள் ஆகியவற்றுக்கு இடையிலான போராகப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். காந்தி எந்த லட்சியத்துக்காகவும் வன்முறையைக் கைகொள்ளக் கூடாது என்ற அகிம்சை மார்க்கத்தையே மனதார நம்பியவர். வன்முறைக்கு ஆதாரமாக உள்ள சுயநலம், பேராசை, இச்சைகள் ஆகிய அனைத்தையும் ஒருவர் களைய வேண்டும், மனத்தின் கண் மாசிலனாக வேண்டும் என்று வலியுறுத்தியவர்.


**வரலாற்று ராமர்**

சாவர்க்கர், இந்தியா முழுவதையும் ஒருங்கிணைத்த மன்னர் ராமர் என்று வரலாற்றில் வாழ்ந்த ஒரு மன்னராக ராமரைக் கூறினார். தனித்தனி சிறு நாடுகளாக இருந்த இந்தியாவை, குறிப்பாக தென்னாட்டை வெற்றிகொண்டு ஒரே ஆட்சியின் கீழ் கொண்டுவந்தவர் ராமர். வீரம் நிறைந்த ஒரு பேரரசர்.

இந்த வரலாற்று ராமருக்கு வரலாற்று ஆதாரம் கிடையாது என்று வரலாற்றாசிரியர்கள் சொன்னால் இந்துத்துவர்களுக்கு கடும் கோபம் வரும். சமஸ்கிருத இலக்கியங்களிலும் சரி, நாட்டார் மரபுகளிலும் சரி ராமரைக் குறித்த பல்வேறு சித்தரிப்புகள் உள்ளன. அவற்றில் பலவற்றில், ஏராளமான இடர்பாடுகளை எதிர்கொண்ட ஒரு மனிதனாகத்தான் ராமர் கூறப்பட்டுள்ளார்.

காளிதாசர் பொ.ஆ. ஐந்தாம் நூற்றாண்டில் எழுதியதாகக் கருதப்படும் ரகுவம்சம் என்ற காவியத்தில் ராமர் ரகுவம்ச மன்னர்களில் ஒருவராகக் கூறப்படுகிறார். அந்த வம்சத்துக்கே பெயரைக் கொடுத்த ரகு என்ற மன்னரே காளிதாசன் காவியத்தில் இந்தியா முழுவதும் திக்விஜயம் செய்து நாட்டை ஒருங்கிணைக்கிறார். தென்னாட்டுக்கும் ரகு படை நடத்தி வந்ததாக ரகுவம்சம் கூறுகிறது. இதற்கெல்லாமும் சரித்திர ஆதாரங்கள் எதுவும் இல்லை. ஏராளமான ராமாயணக் கதைகளுக்குள் பல முரண்பாடுகள் உள்ளன. சீதை ராமனின் சகோதரி என்று கூறும் கதைகளும் உள்ளன.

வால்மீகி ராமாயணத்தை ஆராய்ந்த பலர் அதில் குறிப்பிடப்படும் நிலவியலின்படி, லங்கா என்பது மத்தியப் பிரதேசத்தில் உள்ள ஓர் ஆற்றுத் தீவுதான் என்று கூறுவது உண்டு. அங்குள்ள ஆதிவாசி மக்களையே அரக்கர்களாக வால்மீகி சித்தரித்துள்ளார் என்று கருதுவார்கள்.




ஆனால் இதுபோன்ற பல்வேறு விவாதங்களை புறமொதுக்கி, ராமரை வரலாற்றில் வாழ்ந்த ஒரு அடையாளமாகக் கட்டமைப்பதையே இந்துத்துவர்கள் மேற்கொண்டார்கள். அதன் தொடர்ச்சியாகத்தான் அயோத்தியில் பாபர் மசூதி இருந்த இடத்தில்தான் அவர் பிறந்தார் என்ற பிரச்சாரத்தையும் முன்னெடுத்தார்கள். அந்தப் பிரச்சாரத்தின் விளைவாக இப்போது ஒரு கோயிலையும் அந்த இடத்தில் எழுப்பியுள்ளார்கள்.

அவர்கள் கூறும் ராமராஜ்யம் என்பது மையப்படுத்தப்பட்ட அதிகாரம் என்பதை யூகிப்பது கடினமல்ல. அவர்கள் பழைய பேரரசு கால சிந்தனையில் ஊறியவர்கள். அதனால் இந்திய ஒன்றிய அரசை ஒற்றை அரசாகக் கட்டமைக்க இந்து அடையாள பெரும்பான்மைவாத அரசியலை முன்னெடுக்கிறார்கள்.

**எதிர்கால இந்தியாவில் ராமராஜ்யம் எப்படி இருக்கும்?**

காந்தி வலியுறுத்திய லட்சியம் வலியோரும், எளியோரும் இணைந்து பொது நன்மையைக் கருத்தில்கொண்ட அரசமைப்பு. அனைவருக்கும் எளிதில் நீதி வழங்கப்படும் காருண்யமிக்க அமைப்பு, அதையே அவர் ராமராஜ்யம் என்றார். அதை அவர் மத அடையாளமாகக் கருதவில்லை.

ஆனால், இந்துத்துவ சக்திகள் அதை இந்தியாவை இந்து ராஷ்டிரமாக கட்டமைக்க பயன்படுத்துகின்றன. ராமர் கோயிலைத் திறந்த கையோடு காசி ஞானவாபி மசூதியை கையகப்படுத்த கோரிக்கை வைக்கின்றனர். தொடர்ந்து மத அடையாள அரசியலை பேணுவதையே லட்சியமாகக் கொண்டுள்ளனர் என்பது தெளிவு.

உண்மையில் காந்தியின் லட்சியங்களில் நாட்டம் கொண்டோர், அவரது மத நல்லிணக்கத்தில் மதிப்பு கொண்டோர், எப்படி இந்த இந்து அடையாள அரசியலை எதிர்கொள்ளப் போகிறார்கள் என்பதே கேள்வி. அவர்கள் காந்தியின் சிந்தனைகளை உயிர்ப்பித்துப் பேசாவிட்டால், காந்தியின் ராமராஜ்யம், இந்துத்துவ ராமராஜ்யத்தில் கரைந்துவிடும் வாய்ப்புகள் அதிகம்.


நன்றி :
**'மின்னம்பலம்'**
இணையதளம்





வேலூர் மாவட்ட தி.மு.க. – அலுவலகத்தில் நடந்த மத நல்லிணக்க நாள் நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமதுசகி, மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு உறுதிமொழி ஏற்றனர். கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொண்டனர்.




விருதுநகரில் மத நல்லிணக்க உறுதிமொழி ஏற்பு கூட்டம் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. உடன் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், ஒன்றிய சேர்மன் பொன்னுதம்பி, விருதுநகர் நகரச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.தனபாலன், ஆர்.கே.செந்தில், சுப்பாராஜா, சிவகாசி, உதயசூரியன், பிரியா காளிராஜன், எஸ்.ஆர்.எஸ்.ஆர்.மாதவன், கே.ஜி.ராஜகுரு, ஆவுடையம்மாள், சந்தான பாண்டியன், ஏ.எஸ்.கே.ரமேஷ் குமார், ஸ்ரீராம் காசிராஜன், சுமதி, ராஜசேகர், கார்த்தி, ஜெகன்பால், பாண்டியன், கருணாநிதி, பாண்டியன், எல்.திருமாறன், கருப்பு ராஜா, பாலமுருகன், தெய்வநாயகம், ரவிவர்மா, திவாகர் உள்ளனர். அனைத்து மதத்தையும் சார்ந்த பெரியவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

கலைஞர் 100
1924 - 2023




கலைஞர் நூற்றாண்டு விழா

# முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு



# திமுக பொறியாளர் அணி

நடத்தும்

## கோவை மண்டல அளவிலான பேச்சுப்போட்டி

மற்றும்

## மாணவர்களுக்கான கலைத்திறன் போட்டி

## கலைஞர் கொண்டாட்டம்

நாள் : 31.01.2024, புதன் கிழமை
இடம் : என்.ஜி.எம்.கல்லூரி, பொள்ளாச்சி

வரவேற்புரை
**கு.சண்முகசுந்தரம்**
பாராளுமன்ற உறுப்பினர், பொள்ளாச்சி

முன்னிலை
**எஸ் கே பி. கருணா**
மாநில பொறியாளர் அணிச் செயலாளர்

**துரை கி.சரவணன்** EX.MLA
மாநில பொறியாளர் அணித் தலைவர்

**அ.வெற்றியழகன்** MLA
மாநில பொறியாளர் அணி இணைச் செயலாளர்

மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர்கள்
**வே.உமாகாந்த் இரா.நரேந்திரன் சி.பிரதீப் இரா.ப.பரமேசுகுமார்**




வெற்றி பெற்ற மாணவர்களுக்கு
பரிசளித்து சிறப்புரை

மாண்புமிகு
## ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அவர்கள்
உயர்கல்வித்துறை அமைச்சர்

தலைமையேற்று சிறப்புரை

மாண்புமிகு
## எஸ்.முத்துசாமி அவர்கள்
வீட்டு வசதித் துறை அமைச்சர்

வாழ்த்துரை

திரு **தளபதி முருகேசன்** – கோவை தெற்கு மாவட்ட செயலாளர்
திரு **நா. கார்த்திக்** – கோவை மாநகர் மாவட்ட செயலாளர்
திரு **தொ.ரவி** – கோவை வடக்கு மாவட்ட செயலாளர்
மாண்புமிகு **வி.செந்தில் பாலாஜி** – கரூர் மாவட்ட செயலாளர்
திரு **ப.முபாரக்** – நீலகிரி மாவட்ட செயலாளர்
திரு **க.செல்வராஜ்** – திருப்பூர் வடக்கு மாவட்ட செயலாளர்
திரு **இல.பத்மநாபன்** – திருப்பூர் தெற்கு மாவட்ட செயலாளர்
திரு **என்.நல்லசிவம்** – கரூர் மாவட்ட செயலாளர்
திரு **கே.ஆர்.என் ராஜேஷ்குமார்** – நாமக்கல் கிழக்கு மாவட்ட செயலாளர்
திரு **எஸ்.எம்.மதுரா செந்தில்** – நாமக்கல் மேற்கு மாவட்ட செயலாளர்
திரு **இரா.நவநீத கிருஷ்ணன்** – நகர கழக செயலாளர், பொள்ளாச்சி.
திருமதி **சியாமளா நவநீத கிருஷ்ணன்** – நகர மன்ற தலைவர், பொள்ளாச்சி.

தலைப்புகள்
1. "தமிழ்ச் சமூகத்தின் மீதான கலைஞரின் அன்பு"
2. "பெரியார், அண்ணா வழியில் கலைஞரின் சாதனைகள்"
3. "கலைஞரால் தலை நிமிர்ந்த தமிழகம்"

கலந்து கொள்ளும் மாவட்டங்கள்
- கோவை தெற்கு
- கோவை வடக்கு
- கோவை மாநகர்
- ஈரோடு வடக்கு
- ஈரோடு தெற்கு
- திருப்பூர் வடக்கு
- திருப்பூர் தெற்கு
- நீலகிரி
- கரூர்
- நாமக்கல் கிழக்கு
- நாமக்கல் மேற்கு

நன்றியுரை
**பிரபாகரன்**
மாவட்ட அமைப்பாளர்,
கோவை தெற்கு மாவட்ட பொறியாளர் அணி

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் – மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர்கள்

**நா.பாபு** – கோவை மாநகர்
**அம்பாள் எஸ்.எ.நந்தகுமார்** – கோவை வடக்கு
**மு.அருள்பிரகாஷ்** – திருப்பூர் வடக்கு
**கு.பாப்புகண்ணன்** – திருப்பூர் தெற்கு
**சி.முத்துகுமார்** – ஈரோடு தெற்கு
**எஸ்.கருணாகரமூர்த்தி** – ஈரோடு வடக்கு
**பா.கிருபாகரன்** – நாமக்கல் கிழக்கு
**ஆர்.பெரியசாமி** – நாமக்கல் மேற்கு
**கே.எம்.ஆர்.செந்தில்நாதன்** – நீலகிரி
**வி.அருண்** – கரூர்

வரவேற்று மகிழும்

# திமுக பொறியாளர் அணி

# திராவிடப் போராளிகள்

52 ■ வழக்கறிஞர் அருள்மொழி

**மறைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...**

ஓவியம் : ரவி பேலட்



## மகளிர் மன்றம் வளர்த்த வெற்றிச்செல்வி அன்பழகன்!

*06.01.1958* அன்று பிரதமர் நேரு சென்னை விமான நிலையத்திற்கு வந்து இறங்கியபோது அவரே அதிர்ச்சி அடையும்படியாக அணி அணியாக ஆயிரக்கணக்கான திராவிட இயக்கத் தொண்டர்கள் ஆண்களும் பெண்களுமாக கறுப்புக்கொடியோடு விமான நிலையத்தை முற்றுகையிட்டார்கள். ‘நேருவே, திரும்பிப்போ!! ‘GO BACK NEHRU !!’ என்ற முழக்கங்களால் நாடே அதிர்ந்தது.’

யார் அவர்களை வழிநடத்துகிறார்கள், என்று காவல்துறையால் அடையாளம் காண முடியாத நிலையில் முன்னணியில் நின்று முழக்கமிட்ட பெண்களையும் கடுமையாகத் தாக்கத் தொடங்கினார்கள். காவல்துறையின் பிடியில் சிக்காமல் விமானநிலையத்தில் இருந்து வெளியேறி கால்நடையாகவே காஞ்சிபுரம் வரை சென்று உறவினர் வீட்டை அடைந்தார், அப்போராட்டத்துக்குத் தலைமையேற்ற இருபெண்களில் ஒருவரான வீராங்கனை வெற்றிச்செல்வி. மற்றொரு வீராங்கனை அலமேலு அப்பாதுரை அவர்கள்.

### வெற்றிச்செல்வி ஆன ஜெயலட்சுமி!

திராவிட இயக்கம் நடத்திய அரசியல் சட்டஎரிப்புப் போராட்டத்தையும், இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தையும் ஒடுக்க அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்ட, அன்றைய காங்கிரசு ஆட்சி செய்வதறியாமல் திகைத்தது.

‘தந்தை பெரியாரை மனநலம் குன்றிய முதியவர்’ என்றும் தி.மு.க வின் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைச் சிறுபிள்ளைத்தனமானது என்றும் பேசிய இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு 06.01.1958 அன்று சென்னை வருகிறார் என்றும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்ததால் பேரறிஞர் அண்ணா, கலைஞர், நாவலர், ஈ.வெ.கி சம்பத், கே.ஏ. மதியழகன், பேராசிரியர் அன்பழகன், ஏ.வி.பி ஆசைத்தம்பி என அனைத்துத் தலைவர்களும் முன்கூட்டியே கைது செய்யப்பட்டு விட்டனர். ஆகவே, நேருவின் வருகைக்குப் பெரிய எதிர்ப்பு இருக்காது என்று நம்பிய ஆதிக்கவாதிகளை அலறச்செய்த திராவிடப்போராளியான வெற்றிச்செல்வியின் இயற்பெயர் ஜெயலட்சுமி.

**தன்னலமற்ற திராவிடப் போராளியான வெற்றிச்செல்வி அன்பழகனின் பெயர் என்றும் அழியாது வரலாற்றில் நிலைத்திருக்கும்.**

### மணமகனின் கோரிக்கை

சிங்கப்பூர், பினாங்கில் தொழில்செய்து பின்னர் குடும்பத்துடன் சொந்த மண்ணான திருவாரூருக்கு வந்து சேர்ந்த கிருஷ்ணசாமி - சாரதாம்பாள் ஆகியோரின் ஒரே மகள். 1925-ஆம் ஆண்டு பிறந்தவர். இளம்வயதில் தாயை இழந்து பாட்டியால் பக்தியுடன் வளர்க்கப்பட்ட ஜெயலட்சுமியும் அவரது சகோதரர்கள் ஜெயபால், ராஜசுந்தரம் ஆகியோரும் தந்தை கிருஷ்ணசாமியுடன் சென்னைக்குக் குடிபுகுந்தார்கள். புரசைவாக்கம் வெள்ளாளர் தெருவில் சொந்தவீட்டில் வசித்த ஜெயலட்சுமி பள்ளிப்படிப்பை முடிக்கும்போதே திருமணப் பேச்சு தொடங்கியது. மணமகன் எம்.ஏ படித்தவர். பெரியாரின் தீவிரத்தொண்டர்.

திருமணத்திற்காக பெண்ணிடம் மணமகன் வைத்த ஒரே கோரிக்கை அவர் பெயரை தமிழ்ப்பெயராக மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதுதான். ஏனெனில், மணமகனே ‘ராமையா’ என்ற தன் பெயரை அன்பழகன் என்று மாற்றிக் கொண்டவர். பச்சையப்பன் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றியதோடு அருவி போல் பொழியும் கொள்கைவிளக்கத்தால் பின்னாளில் இயக்கத் தோழர்களால் பேராசிரியர் என்றும் இனமானப் பேராசிரியர் என்றும் அழைக்கப்பட்டவர். ஜெயலட்சுமி பெயரை மாற்றிக் கொள்ளச் சம்மதித்தார். வெற்றிச்செல்வி ஆனார். அவர்கள் திருமணம் 1945-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் சென்னை புரசைவாக்கத்தில், தந்தை பெரியார் தலைமையில் நடைபெற்றது.

### மகளிர் மன்றத் தொடக்க விழா

பக்தியும் பழமையும் நிறைந்த குடும்பச்சூழலில் வளர்ந்த ஜெயலட்சுமிக்குப் பகுத்தறிவுச் சூழல் புதியதொரு சிறகைத் தந்தது. கணவரிடம் கொண்ட அன்பு, கொள்கைப் பற்றையும் ஊட்டியது. எனவே, இயக்கக் கூட்டங்களில் ஆர்வமுடன் பங்கேற்றார். திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றியபிறகு, அண்ணாவின் கட்டளைகளை ஏற்று நடந்தார். கூட்டங்களில் மட்டுமல்ல, போராட்டங்களிலும் முன்நின்றார்.

1956 ஆம் ஆண்டு அக்டோபர் 11 ஆம் நாள் தொடங்கப்பட்ட, ‘திராவிட முன்னேற்றக் கழகத்தின் மகளிர் மன்றம்’ சத்தியவாணிமுத்து அம்மையாரின் தலைமையில் சாதனைகளைப் படைத்தது. அண்ணாவின் வழிகாட்டுதலோடும் வாழ்த்துரையோடும் நடைபெற்ற மகளிர் மன்றத் தொடக்கவிழாவிற்குத் தலைமையேற்றவர் டாக்டர் தர்மாம்பாள், தொடக்க உரை ஆற்றியவர் வெற்றிச்செல்வி அன்பழகன்.

“மற்ற நாடுகளிலெல்லாம் பெண்கள் எவ்வளவோ முன்னேறியிருக்கிறார்கள். ரஷ்யா, சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளில் பெண்கள் ஆண்களுடன் சரிநிகர் சமானமாக வாழ்ந்து வருகின்றனர் என்பதை நீங்கள் அறிவீர்கள். எந்த ஒரு துறையிலும் பெண்கள் ஈடுபடாமல் இருப்பதில்லை. பொதுவாக, அவர்களிடம் தாழ்வுமனப்பான்மை என்பதே இல்லை. அதனால்தான், அந்த நாடுகள் முன்னேறுகின்றன.

நம்முடைய நாட்டிலோ, பெண்கள் பன்னெடுங்காலமாக அடிமை மனப்பான்மையிலேயே ஊறித் திளைத்துவிட்டனர். அவர்கள் அந்த மனப்பான்மையிலிருந்து விடுபடுவது எளிதல்ல. கல்வி, அறிவு, ஆற்றல், வெளி உலகப் பழக்க வழக்கம் முதலியவை பெருகினால்தான் சிறிதேனும் உரிமை மனப்பான்மை ஏற்படும். அதற்கு நம்முடைய பெண்கள் மூடநம்பிக்கையை நீக்கி, கண்மூடிப் பழக்க வழக்கங்களைக் கைவிட்டு, பகுத்தறிவுக் கொள்கைகளைப் பின்பற்ற வேண்டும். அதற்காகவே, பெண்களிடம் பிரச்சாரம் செய்வதற்கும் அவர்களிடையே ஒரு தெளிவை உண்டாக்குவதற்கும் இந்த மன்றம் தோன்றியுள்ளது” என்று மகளிர் மன்றத்தின் நோக்கத்தை வரையறுத்து, அவர் ஆற்றிய உரை வெற்றிச்செல்வியின் அறிவாற்றலை எடுத்துக்காட்டியது.

தொடர்ந்து, தமிழ்நாடு முழுவதும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மகளிர் மன்றத்தில் கழகக் குடும்பத்துப் பெண்களை இணைப்பதில் தீவிரமாகச் செயல்பட்டார்.

### திருமணத்துக்குப் பின் மருத்துவக் கல்வி

தன் கணவரான பேராசியர் அன்பழகன் அவர்கள் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட போது அவருக்காகவும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்காகவும் கவுன்சிலர் தேர்தல் முதல் சட்டமன்ற நாடாளுமன்றத் தேர்தல்களிலும் மகளிரோடு சென்று பரப்புரை செய்வதில் வெற்றிச்செல்வி அவர்கள் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார்.

எத்தனையோ பணிகளுக்கிடையிலும் மருத்துவம் சார்ந்து பணியாற்ற வேண்டும் என்ற தொண்டுச் சிந்தனையும் வெற்றிச்செல்வி அம்மையாருக்கு இருந்தது. எனவே, திருமணத்திற்குப் பின் ஹோமியோபதி மருத்துவப் பயிற்சியை முடித்தார். ஆனால், மருத்துவத்திற்குப் பணம் வாங்காமல் புரசைப் பகுதியில் வாழ்ந்த ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாக மருத்துவ உதவி செய்துவந்தார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்தபோது அவரது உடலைக் காணவேண்டும் என்று துடித்து வெற்றிச்செல்வி அம்மையாரின் உதவியை நாடிய ஏராளமான எளிய மக்களைத் தன் குடும்பத்தினருடன் சேர்த்து, ஊர்வலமாக அழைத்துச்சென்று அண்ணாவிற்கு இரங்கல் தெரிவிக்கச் செய்தார். இப்படி மக்களோடு சேர்ந்து எப்போதும் இயங்கிக் கொண்டிருந்த வெற்றிச்செல்வி அம்மையாரின் செயலாற்றலை புற்றுநோய் முடக்கிப் போட்டது. அண்ணா அவர்கள் இறந்த அதே 1969 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ஆம் தேதி வெற்றிச்செல்வி அம்மையார் மறைந்தார்.

அவரது உழைப்பிற்கு மரியாதை செய்யும் வகையில், தமிழ்நாடு அரசு தொடங்கிய முதல் ஹோமியோபதி கல்லூரிக்கு “தமிழ்நாடு அரசு வெற்றிச்செல்வி அன்பழகன் ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி “ என்று பெயர்சூட்டிப் பெருமைப்படுத்தினார் முத்தமிழறிஞர் கலைஞர் . மேலும் திராவிட முன்னேற்றக் கழக அறக்கட்டளை சார்பாக சென்னை அறிவாலயம் அமைந்துள்ள தேனாம்பேட்டையில் செயல்படும் கண் மருத்துவமனைக்கும் வெற்றிச் செல்வி அன்பழகன் அவர்கள் பெயரைச் சூட்டினார்.

இல்லற வாழ்வின் பொறுப்புகளையும் திறம்பட நடத்திய வெற்றிச்செல்வி - அன்பழகன் இணையருக்கு நான்கு குழந்தைகள் பிறந்தன. முதல் குழந்தை பிறந்து சிலநாட்களில் இறந்து விட்டது. இரண்டாவது மகள் செந்தாமரை, மூன்றாவது மகள் மணமல்லி இருவரும் மருத்துவர்கள். ஒரே மகன் அன்புச்செல்வன் அவர்களின் மகன் வெற்றியழகன் தற்போது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்ற உறுப்பினராகச் செயல்படுகிறார். வெற்றிச்செல்வி அன்பழகன் அவர்களின் மூத்த மருமகன் புகழ்பெற்ற இதய மருத்துவ நிபுணரான டாக்டர் சொக்கலிங்கம் அவர்கள்.

தன்னலமற்ற திராவிடப் போராளியான வெற்றிச்செல்வி அன்பழகனின் பெயர் என்றும் அழியாது வரலாற்றில் நிலைத்திருக்கும்.

(வருவார்கள்...)

---

### நெருப்போடு விளையாட வேண்டாம்!

ஒன்றிய அரசின் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் இட ஒதுக்கீடு முறையாக வழங்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டுகள் நீண்ட காலமாக இருந்து வருகிறது. இந்த நிலையில், அதனை முற்றிலுமாக ஒழித்துக்கட்டத் உயர் கல்வி நிறுவனங்களில் எஸ்.சி., எஸ்.டி., ஓ.பி.சி. பிரிவினருக்கான இட ஒதுக்கீட்டைப் பெற போதிய விண்ணப்பங்கள் இல்லா ‘விட்டால், மீதமிருக்கும் இடங்களைப் பொதுப்பிரிவில் நிரப்புவதற்கான பரிந்துரை ஒன்றை பல்கலைக்கழக மானியக் குழு தயாரித்திருக்கிறது. அரசியலமைப்பு சாசனத்தில் உறுதி செய்யப்பட்ட இட ஒதுக்கீட்டுக் கொள்கையை, தனியொரு ஆளாக பல்கலைக்கழக மானியக் குழுவால் நீக்க முடியுமா? இட ஒதுக்கீட்டைப் பற்றிய பா.ஜ.க.வின் பார்வை என்ன என்றெல்லாம் கடும் விமர்சனங்கள் எழுந்ததை அடுத்து பல்கலைக்கழக மானியக் குழு இதிலிருந்து பின்வாங்கியிருக்கிறது.

இன்னும் நிறைவுறாதபோது, அதற்குள் இட ஒதுக்கீட்டையே இல்லாமல் ஆக்கும் செயல்கள் சமூகத்தை மீண்டும் ஒரு நூற்றாண்டு பின்னோக்கி இழுக்கத் துடிக்கும் சதிச்செயல்களே. இட ஒதுக்கீட்டை அழிக்கிற முயற்சியில் சிறுதுரும்பை வீச முயன்றாலும், அது நெருப்போடு விளையாடும் விபரீத செயல் என்பதை ஒன்றிய அரசு புரிந்துகொள்ள வேண்டும்.

---

### :ப்ளாஷ்பேக்



முபாரக்

#### தேர்தலுக்குத் தயார்படுத்திய உரை!

இன்றைய கழகத் தலைவர் அவர்கள் இளைஞர் அணிச் செயலாளராக இருந்த போது, விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் பகுதியில், பல்வேறு கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக வருகை தந்திருந்தார். 2005-ஆம் ஆண்டு நடைபெற்ற அந்த நிகழ்வில், சங்கராபுரம் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் கோ.முனுசாமி அவர்களது தொலைபேசி நிலையத்தைத் திறந்து வைத்ததோடு கழகக் கொடியேற்றி வைத்து, தொண்டர்களை ஊக்கப்படுத்தும் உரையை அவர் ஆற்றினார். 2006-ஆம் சட்டமன்றத் தேர்தலுக்கு எங்களை எல்லாம் தயார்படுத்தும் வகையில், அந்த உரையும் நிகழ்வும் அமைந்தன. அப்படியான தருணத்தில் அவருடன் நான் எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.

**-ஷே.ஆ.முபாரக், சங்கராபுரம், கள்ளக்குறிச்சி.**

இது போன்ற அரிய புகைப் படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

---


### கருவூலம்

#### அண்ணா மூன்றெழுத்து!

**1952 முதல் பொதுத்தேர்தலில் பங்கேற்பது பற்றி விவாதிக்க, 1951 நவம்பர் மாதம் மதுரையில் கழகப் பொதுக்குழு கூடியது. மாநாட்டுத் தலைராக பேரறிஞர் அண்ணாவை வழிமொழிந்தார் கலைஞர். “வாழ்வு மூன்று எழுத்து; வாழ்விற்குத் தேவையான பண்பு மூன்று எழுத்து; பண்பிலே பிறக்கும் அன்பு மூன்று எழுத்து; அன்பிலே சுரக்கும் காதல் மூன்று எழுத்து; காதல் விளைவிக்கும் வீரம் மூன்றெழுத்து; வீரர் செல்லும் களம் மூன்று எழுத்து; களத்திலே பெறும் வெற்றி மூன்றெழுத்து; அந்த வெற்றிப் பாதைக்கு நம்மை அழைத்துச்செல்லும் அண்ணா மூன்று எழுத்து. அந்த அண்ணனைத் தலைமையேற்க வழிமொழிகிறேன்” என மூன்றெழுத்து மந்திரத்தை உச்சரித்தார் கலைஞர்.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 374




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.